


# தேசம்
NATION THE THESAM




Issue - 04 Once a Month JUNE 2024

## உண்மையைச் சொன்னால் வன்முறைதான் தீர்வா?

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் இணைந்து போராட்டம்




## கனடாவில் மே 2024 ல் அதிகரித்த பணவீக்க விகிதம் யூலையில் குறையுமா?

## சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரோ ஒருவரின் வெற்றிக்காக “திரைமறைவில்“ சுமந்திரம் ஒப்பந்தமா?





## எமது தாயகக் கடலில் இருக்கின்ற வளங்கள் கனிம வளங்கள் அனைத்துமே இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளன?

# தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணி பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருவதில் தென்னிலங்கை மீதான விசுவாசகம் தெரிகின்றது

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் அரசியலில் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைய தொடங்கிவிட்டது.ஒரு பக்கம் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பானது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு உழைத்து வருகின்றது.அது கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவிருக்கின்றது.இன்னொரு பக்கம் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருகின்றது.

தமிழ் பொது வேட்பாளர் வேண்டுமா வேண்டாமா என்ற விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.இந்த விவாதத்தை முதலில் தொடக்கி வைத்தது அரசியல் விமர்சகர்கள் சிலர்,அரசியல்வாதிகளான சுரேஷ் பிரேமச்சந்திரன், விக்னேஸ்வரன்,இவர்களோடு மக்கள் மனு என்று அழைக்கப்படும் ஒரு குடிமக்கள் சமூகம்.யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் காணொளி ஊடகம் ஒன்றின் அனுசரணையோடு இயங்கும் ஒரு குடிமக்கள் சமூகம் அது.பொது வேட்பாளருக்கு ஆதரவாக அந்த சிவில் சமூகம் வடக்கு கிழக்கில் இதுவரை மூன்று கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தியிருக்கின்றது. இக்கருத்தரங்குகளில் பொது வேட்பாளரை ஆதரித்து எழுதிவரும் கருத்துருவாக்கிகள்,அரசியல் செயற்பாட்டாளர்கள்,அரசியல்வாதிகள், ஆர்வலர்கள் பங்குபற்றுவதுண்டு.

அந்தச் சிவில் சமூகம் தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் ஒருங்கிணைந்து காணப்படும் சிவில் அமைப்புகளில் ஒன்றாகும்.தமிழ் மக்கள் பொதுச்சபையானது கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மக்கள் மத்தியில் சந்திப்புகளை ஒழுங்குபடுத்தி வருகின்றது. இச்சந்திப்புகள் யாவும் சிறியவை. ஆனால் இச்சந்திப்புக்களில் ஈடுபடும் அமைப்புக்கள் யாவும் மாவட்ட மட்ட ஒன்றியங்கள் ஆகும்.கடற் தொழிலாளர் ஒன்றியம், கூட்டுறவாளர் ஒன்றியம், பார ஊர்திகள் சங்க ஒன்றியம், வர்த்தக சமூகங்கள் போன்றவற்றுடன் குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் கலந்துரையாடி வருகிறார்கள். இந்த உரையாடல் அனைத்திலுமே பொது வேட்பாளருக்கு ஆதரவாகத்தான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இச்சந்திப்புக்களில் யாரும் ஏன் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கேட்கவில்லை. அல்லது ஏன் ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்கக் கூடாது என்றும் கேட்கவில்லை. அல்லது ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் அவர் இனவாதத்தை தூண்டி விடுவார் என்றும் சொல்லவில்லை.

இவ்வாறாக ஒருபுறம் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக சந்திப்புக்களும் கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்யப்பட்டு கொண்டிருந்த ஒரு பின்னணிக்குள், கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் ஒரு கருத்தரங்கு, மக்கள் மன்று என்ற பெயரில் ஒழுங்கு செய்யப்பட்டது. அதை ஒழுங்கு படுத்தியவர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு நெருக்கமான சாவகச்சேரியை சேர்ந்த ஒரு சட்டத்தரணி ஆகும்.அவர் முன்பு மாகாண சபை உறுப்பினராகவும் இருந்தவர்.

இக்கருத்தரங்கில் 300க்கும் குறையாதவர்கள் கலந்து கொண்டார்கள். கருத்தரங்கில் உரை நிகழ்த்தியவர்களுள் சட்டத்தரணி சிறீகாந்தாவைத் தவிர அனைவரும் தமிழ்ப் பொது வேட்பாளரை எதிர்த்துக் கருத்துக் கூறினார்கள். இதுபோன்ற கருத்தரங்குகள் எதிர்காலத்தில் வடக்கு கிழக்கில் நடாத்தப்படும் என்றும் தெரிய வருகிறது.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் தமிழ் அரசியலில் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைய தொடங்கிவிட்டது.ஒரு பக்கம் தமிழ் மக்கள் பொதுச்சபை என்ற மக்கள் அமைப்பானது பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு உழைத்து வருகின்றது.அது கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கவிருக்கின்றது.இன்னொரு பக்கம் தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியானது பொது வேட்பாளருக்கு எதிராக உழைத்து வருகின்றது.

தவிர தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்கனவே களத்தில் இறங்கிவிட்டது.சில வாரங்களுக்கு முன் அவர்கள் யாழ் நகரப் பகுதியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள்.அத்துண்டுப் பிரசுரங்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரானவை.பகிஸ்கரிப்பை இம்முறை நடைமுறைப்படுத்துவது என்ற நோக்கம் கட்சியிடம் உண்டா இல்லையா என்று தெரியவில்லை. ஆனால் பலஸ்கரிப்புக்காக உழைப்பது என்பது ஒரு தேர்தல் பிரச்சாரம்தான்.யாருக்கும் வாக்களிக்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்வது.

இவ்வாறாக தமிழ்ப் பரப்பில் ஜனாதிபதித் தேர்தலையொட்டி மூன்று போக்குகள்



# ஊடகவியலாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டுவருவதை ஏற்கமுடியாது என அமைச்சர் டக்ளஸ் கண்டனம்

நாட்டில் இயல்பான சூழ்நிலை காணப்படும் இந்த காலகட்டத்தில் ஊடகவியலாளர்கள் மீது வன்முறைத் தாக்குதல்களும் அச்றுசுத்தல்களும் விடுக்கப்பட்டுவருவதை ஏற்கமுடியாது என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அத்தகைய செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிராந்திய ஊடகவியலாளரான பிரதீபன் வீட்டின் மீது அண்மையில் நடத்தப்பட்ட வன்முறை தாக்கதல் தொடர்பில் கருத்து கூறும்பேதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது. கடந்த காலங்களில் நாட்டில் எத்தனை தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் கொலைகள் எல்லாம் நடந்திருந்தது என உங்களுக்கு தெரியும். அன்று அதை செய்தவர்கள் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிற மாதிரியான போர்வையிலேயே அதை முன்னெடுத்திருந்தனர்.

குறிப்பாக ஊடகவியலாளர் மீது தங்களுடைய வஞ்சகத்தை தீர்த்துக் கொள்வது ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் அதன் பழியை ஈ.பி.டி.பி மீது இலகுவாக போட்டு தாம் தப்பித்துக்கொள்வதாக இருந்தது. இதுதான் கடந்த காலங்களில் நடந்தது.

அதேபோன்றுதான் இன்றைக்கும் இந்த சம்பவங்கள் தொடர்து வருகின்றன. ஆனால் துரதிஸ்ரவசமாகவோ அதிர்ஷ்டவசமாகவோ ஈ.பி.டிபியின் பெயர் இன்று அத்தகைய செயற்பாடுகளில் பயன்படுத்துவது இல்லாது போய்விட்டது.



அது உணர்வினுடைய வெளிப்பாடாக இருக்கலாம் அல்லது அந்த வன்முறைக்கு தலைமை தாங்கியவர்கள் இன்று அடியோடு இல்லாமையாகவும் இருக்கலாம். கடந்த காலத்தில் வன்முறைக்கு தலைமை தாங்கியவர்கள் ஈ.பி.டிபினுடைய மாற்றிக் கொள்கை அல்லது மாற்று வேலைதிட்டத்தை விரும்பாததால் அல்லது தாங்கள் செய்வது அம்பலப்பட்டு போகும் என்பதை விரும்பாமல் ஈ.பி.டி.பியை ஏதோ ஒரு வகையில அளிக்க முற்பட்டார்கள். குறிப்பாக உயிர் அச்சுறுத்தல் உயிராபத்துகளையும் ஏற்படுத்தியது மற்றது ஈ.பி.டிபியுடைய நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த முயற்சிகளை செய்தார்கள்.

அதைத்தான் நான் இந்த சந்தர்ப்பத்தில் சகோதரர் பிரதீபன் விடயத்திலும் கூறவிரும்புகின்றேன். அந்தவகையில் எல்லாரும் விழிப்பாக இருந்து. உண்மை வெளிவருமானால் இவ்வாறான சம்பவங்களை நாங்கள் இல்லாமல்செய்யலாம் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.




தேசம் குரல் –மே 2024

Thesam Publishers
தேசம் வெளியீட்டாளர்கள்

EDITORIAL TEAM - THESAM
GRAPHIC: HEVEN
TECHNICAL: Y.INTHUNATHAN
PRINTERS: PRINT TECK
MARKETING & DISTRIBUTION
MANAGER - Ramsankr Sivanathan: 647.891.7725

Phone: 647 848 1113
Unit #201, 3967 Lawrence Ave East, Scarbourough, ON, M1G 1S2
Email: info@thethesam.com www.thethesam.com

# உலகின் மூன்று தேசங்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் விடயத்தில் அங்குள்ள களநிலைமைகள்!

ஐக்கிய அமெரிக்கா. அதன் அயல்நாடான கனடா மற்றும் எமது தாய்த் தமிழ்த் தேசத்தை இன்றும் ஆண்டு கொண்டிருக்கும் இலங்கை ஆகிய மூன்று தேசங்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது தொடர்பான அங்கு காணப்படும் களநிலைமைகள் மிகவும் மோசமாகவும் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் வகையில காணப்படும் இந்த யூன் மாதத்தில் எமது 'தேசத்தின்' இதழை உங்கள் முன்பாக படைத்திருக்கின்றோம்.

உலகின்இயக்கத்திற்கேஅரசியல்என்னும்ஒருதளம்நிச்சயம்அவசியம் என்று கருதப்படுகின்ற நிலை எங்கும் நிறைந்திருக்கின்றபோது, அதற்கு மேலாக உலகம் என்ற ஒரு பிரமாண்டமான கட்டடத் தொகுதியை தாங்கி நிற்கும் நான்கு தூண்களில் 'அரசியல்' ஒரு தூணாகவும், அதன் மற்றுமொரு தூணாக. 'ஊடகம்' என்னும் தர்மத்தை பேண வேண்டிய ஒன்றின் பொறுப்பாளர்களாகிய நாம் இன்றைய நாளின் ஆக்கமாக வடிக்கப்படும் இந்த பக்கத்திற்குரிய எழுத்து வடிவம் மக்களின் நலன் சார்ந்தும் நீதிக்கான குரலை வெளிக்காட்டும் ஒன்றாகவும் இருக்க வேண்டும் என்ற அக்கறையோடு நாம் இந்த விடயத்தை இம்மாதத்தின் கருப்பொருளாகக் கொண்டு உங்களைச் சந்திக்கின்றோம்.

ஐக்கிய அமெரிக்காவிற்கான புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில் அதில் முதன்மை வேட்பாளர்களாக விளங்கும் இருவரான தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முன்பு ஒரு தடைவ அந்த பதவியில் அமர்ந்திருந்து அநியாயச் செயல்களை அரங்கேற்றிச் சென்றவருமான டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையில் கணிசமான போட்டி நிலவுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்த வண்ணம் உள்ளன. சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்ற மேற்படி இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான 'விவாதத்தின்' தாக்கம் இன்னும் ஓய்வுக்குச் செல்லாமல் இருக்கும் நிலையில் நாம் இந்த 'பதவிப் போட்டி' தொடர்பான கரிசனையைக் கொண்டுள்ளோம் என்பதும் எம்மைப் போன்று உலகெங்கும் வாழும் எண்ணிக்கையில் அதிகமான தமிழ் மக்களும் இது பற்றிய தேடல் உள்ளவர்களாக இருப்பார்கள் என்றும் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாகவும் உள்ளார்கள் என்பதையும் நாம் அறிந்து கொண்டுள்ளோம்.

அடுத்து தமிழ் மக்கள் அதிகளவில் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் ஒன்றான கனடாவிலும் தற்போதைய பிரதமர் என்ற ஆட்சித் தலைவர் மற்றும் அவர் தலைமை தாங்கும் ஆளும் கட்சி அவற்றின் செய்ற்பாடுகள் மற்றும் அந்த செயற்பாடுகளினால் இந்த கனடிய தேசத்திற்கு ஏற்பட்டுள்ள சாதக பாதகமான விளைவுகள் ஆகியவை தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மேலும் நாட்டிற்கு ஒரு ஆட்சி மாற்றம் தேவை என்று எதிர்க்கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் குரல் எழுப்பி வருகின்றமையும் நாம் காணும் அல்லது உணரும் விடயங்களாக உள்ளன.

மேலும். தற்போதைய கனடியப் பிரதமர் பதவி விலகி வேறு ஒரு ஆளுமை மிக்க தலைவர் தமது கட்சிக்கு தேவை என்று கனடாவின் ஆளும் லிபரல் கட்சியின் தற்போதை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குரல் கொடுத்திருப்பது இங்கு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் அண்மையில் ரொறன்ரோ பெரும்பாகத்தில் அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றில் கடந்த முப்பது வருடங்களாக அதே தொகுதியை தனதாக்கியிருந்த லிபரல் கட்சியானது, அதை எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவிடம் பறிகொடுத்த 'கொடுமை'யை கடுமையான ஒரு பிரச்சனையாகப் பார்க்கும் லிபரல் கட்சியின் ஆதரவாளர்கள், என விமர்சனங்களின் வீச்சு மிகவும் தாக்கம் நிறைந்தாக காணப்படுகின்றது.

மூன்றாவதாக, நாம் முன்னர் குறிப்பிட்டது போன்றே, எமது தாய்த் தமிழ்த் தேசத்தை இன்றும் ஆண்டு கொண்டிருக்கும் இலங்கை என்னும் மாங்கனித் தீவிற்கான ஆட்சித் தலைவரான ஜனாதிபதியை தேர்ந்தெடுக்கும் தேர்தல் திகதி விரைவில் அறிவிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு நிறைந்திருக்கின்ற இந்த நேரத்தில் எமது இம்மாதத்திற்குரிய 'தேசம்' உங்கள் கைகளில் தவழுகின்றது.

அங்கு ஜனாதிபதி தேர்தல் தொடர்பான கணிப்புகளின் படி முன்னர் மூன்றாவது இடத்தைப் பிடித்த ஜேவியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தற்போது முதலாவது அல்லது இரண்டாவது இடத்தை அடையலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. தற்போது ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ரணில் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் ஜனாதிபதி ஆசனத்தில் அமர வைக்கப்பட்டவர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நடத்தப்படவுள்ள தேர்தலில் எப்படியாவது மோசடிகள் செய்தாவது மக்களின் வாக்குகளைக் களவாடியாவதுஜனாதிபதியாக அதற்குரிய ஆசனத்தில் அமரவேண்டும் என்று ரணில் கனவு கண்டு கொண்டிருக்கின்றார். அந்தக் கனவை நனவாக்குவதற்கு பெரும்பான்மையினச் சிங்களவர்கள் மாத்திரமல்ல சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன், ஸ்ரீதரன் சிவஞானம் போன்ற தமிழ் அரசியல்வாதிகளும் 'திரைமறைவில்' செயற்படுவதும் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

ஆனால் தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுவருபவரும் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாகப் பயணங்களை மேற்கொண்டுவரும் அநுரகுமார திசநாயக்காவை தோற்கடிப்பதிலேயே கவனஞ் செலுத்தி வரும் பிற்போக்கு வாதிகளின் கைகள் ஓங்கிவிடக் கூடாது என்று 'கண் துஞ்சாது செயற்படும் கட்சித் தோழர்களும் ரணிலைத் தோற்கடிப்பது என்பது இலங்கையில் ஜனநாயகத்தை மீண்டும் ஏற்படுத்துவது என்ற செய்தியை உலகெங்கும் கொண்டு செல்லும் என்ற நம்பிக்கையை அங்கு தோற்றுவித்துள்ளது.

இன்னொரு பக்கத்தில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலுக்கான ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக, கட்சிகளும் மக்கள் அமைப்பும் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழ்த் தேசியப் பேரவை என்று பெயரிடப்பட்டுள்ள இந்த அமைப்பு ஜனாதிபதித் தேர்தலை நோக்கிப் பல உப கட்டமைப்புகளை உருவாக்கி. உப கட்டமைப்புக்கள் எல்லாவற்றிலும் கட்சிகளும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் சம அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் யார் பொது வேட்பாளர் என்பதை தீர்மானிக்கும். என்றும் திட்டமிடப்பட்டுள்ளது என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

இவ்வாறாக நாம் இங்கு குறிப்பிட்டுள்ள மூன்று தேசங்களிலும் நீதி நிலைநாட்டப்படும் முயற்சிகளுக்கு நம் தமிழ் மக்கள் முன்னின்று உழைக்க வேண்டும் என்ற குரலை நாம் முன்வைக்கின்றோம்.!

# “மலையக தமிழ் இலக்கியம்”. ‘மலையக சிறப்பிதழும் சிறப்புரை வி.தேவராஜ்



சென்ற மாத இதழின் தொடர்ச்சி....

மலையக ,லக்கிய கர்த்தாக்கள்.

நடேசஜயர் பத்திரிகையாளர் அரசியல்வாதி தொழிங்சங்கவாதி. குறிஞ்சித் தென்னவன் ஒரு தொழிலாளி. சாரல்நாடன் ஒரு தேயிலைத் தொழிற்சாலை அதிகாரி. தெளிவத்தை ஜேசப் ஒரு தோட்டப்பாடசாலை ஆசிரியர். பின்னாளில் ஞவயச வழகககநந நிறுவனத்தில் அக்கவுண்டனாக பணிபுரிந்தார். சி.வி.வேலுப்பிள்ளை ஒரு கவிஞன் சிறுகதை எழுத்தாளன் அரசியல்வாதி நாடாளுமன்ற உறுப்பினர் பத்திரிகை ஆசிரியர். என்.எஸ்.எம் ,ராமையா தோட்டத்தில் எக்கவுண்டனாக் பணி புரிந்து பின்னாளில் கொழும்பில் ,ரும்புக் கடையில் அக்கவுண்டனாகப் பணி புரிந்தவர். மல்லிகை.சி.குமார் கால்நடை மருத்துவமனையில் பணியாற்றியவர்.

அதாவது பெருந்தோட்டத்துறை மலையக சமூகத்தை தெழில் ரீதியாக தொழிலாளியாக ஆசிரியர்களாக தோட்ட உத்தியோகத்தர்களாக

அரசியல்வாதிகளாக தொழிற்சங்கவாதிகளாக பத்திரிகை ஆசிரியாகள் என பல்வேறு தோற்றப்பாடுகளை உருவாக்கிய போதும் ,வர்கள் அனைவரும் ஒட்டு மொத்த மலையகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ,லக்கிய கர்த்தாக்களாகவே வாழ்ந்தனர். மலையகம் என்ற மூச்சுக் காற்றையே அனைவரும் சுவாசித்தனர் என்பதை மறுப்பதற்கில்லை.

மலையக ,லக்கிய கர்த்தாக்களை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. மலையக மண்ணைச் சார்ந்தவர்கள்.
2. மலையகத்தை வாழ்விடமாகக் கொண்டவர்கள்.

இவர்கள் தொழில் நிமித்தமோ அல்லது வேறு தொடர்புகளாலோ மலையகத்தில் வாழ்ந்து மக்களின் வாழ்வியலை உள்வாங்கி ,லக்கியம் படைத்தவர்கள்.

- முதலாவது பிரிவில் சி. வி. வேலுப்பிள்ளை - கோ. மீனாட்சியம்மாள் - கோகிலம் சுப்பையா - என்.எஸ்.எம். ,ராமையா - தெளிவத்தை ஜோசப் - மாத்தளை சோமு - சாரல்நாடன் - தமிழோவியன் - பதுளை ராகுலன் - மொழிவரதன் - மலரன்பன் - மாத்தளை வடிவேலன் - அஸூமத் -,ப்னு அஸூமத் - அந்தனி ஜீவா - மல்லிகை சி. குமார் - மரியதாஸ் - எம். முத்துவேல் - சாந்திகுமார் - புசலாவ ,ஸ்மாலிகா - கேகாலை கைலைநாதன் - லெனின் மதிவானம் - ,ராகலை பன்னீர் - ஜெ. சற்குருநாதன் - திலகா பழனிவேல் - சந்திரலேகா கிங்ஸிலி முதலானோர் உற்பட ,ன்னும் பலர் ,ந்த வரிசையில் அடங்குகின்றனர்.

 மலையக மண்ணைச் சாராத யோ. பெனடிக்ற்பாலன் - செ. கணேசலிங்கம் - நந்தி - புலோலியூர் க. சதாசிவம் - வ.ஐ.ச. ஜெயபாலன் - கே. ஆர். டேவிட் - ,தயராசன் - அ.செ.முருகானந்தம் - தி.ஞானசேகரன் என்று பலரை வரிசைப்படுத்தலாம்.

“தூரத்துப் பச்சை” பிறந்த கதை

“தூரத்துப்பச்சை” நாவலின் பிரதியைத் தமிழ்ப் புத்தகாலய கண. முத்தையாவிடம் காட்டினேன். பிரசுரிக்கலாம் என்றார். ஆனால், அதிகமாக விற்பனை ஆகாது என்றார். சிதம்பர ரகுநாதன் புத்தகத்தைப் படித்து, பிரசுரிக்குமுன் நனவை செய்தார். அந்த சமயத்தில் தோட்டத்தொழிலாளிகள் ஏழைகளாகத் துன்பப்பட்டார்கள். அவர்கள் சரிதையை எழுதவோ, சிந்திக்கவோ யாரும் நினைக்கவில்லை. சங்கத்தலைவர்கள் அவர்களின் புகழைத்தான் நினைத்தார்கள். தொழிலாளியின் துயரங்களை நினைக்க அவகாசமில்லை. நான் ஒன்றும் மகத்தான சேவை செய்யவில்லை.

ஆனால், அவர்களைப் பற்றியும் அவர்கள் எந்த நிலையில் இலங்கை வந்தார்கள் என்பது பற்றியும் உலகம் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதுதான் என் ஆசையாக இருந்தது. நிறைவேற்றினேன்” என்று கோகிலம் சுப்பையா அமெரிக்காவிலிருந்து 15.11. 1995 திகதியிட்டு மு.நித்தியானந்தன் அவர்களுக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

வீரகேசரியின் நூல்வெளியீட்டு வரிசையில் 10ஆவது வெளியீடாக ‘தூரத்துப்பச்சை’ 1973 இல் மறுபிரசுரம் பெற்றது என்ற பதிவினையும் நித்தியானந்தன் சேர் குறிப்பிட்டுள்ளார்.

மலையக இலக்கியத்தில் பல பெண் எழத்தாளர்கள் தற்போது பிரவேசித்துள்ளனர்.

சிவபாக்கியம் குமாரவேல்

ஒரு முக்கியமான பெண் ஆளுமை பற்றி இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அவர்தான் சிவபாக்கியம் குமாரவேல்

இவர் 1946 ,ல் “,தய கீதம்” என்ற தலைப்பில் ஒரு கவிதை நூலினை வெளியிட்டுள்ளார். வசனக் கவிதையில் அமைந்துள்ள ,ந்த கவிதைகள் தாகூரின் கீதாஞ்சலியின் தாக்கத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது என ,லக்கிய விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். மலையக வசனக் கவிதை நடை பாரம்பரியத்தின் முன்னோடியாக சிவபாக்கியம் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில் 1970 களில் சிவானந்தன் அவர்களின் “வண்ணச் சிறகு கதைகள்” என்ற வசன கவிதை நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை ,ந்திய ஒப்பந்தங்களால் தமிழகம் திரும்பி மசின குடியில் வாழ்ந்தவர் சிவானந்தன்.

இந்த நூல் மல்லிகைப்பூசந்தி திலகர் அவர்களினால் மறுபிரசுரம் செய்யப்பட்டள்ளது.”

முற்றும்

# கனடா பிக்கரிங் நகரில் நடைபெற்ற INTERNATIONAL CHILDREN'S EXPO – 2024



**LUCKY EXCLUSIVE FOUNDATION** அமைப்பின் சார்பில் **'INTERNATIONAL CHILDREN'S EXPO-2024** “சர்வதேச சிறுவர்களின் கொண்டாட்டம்” என்னும் இரண்டு நாள் விழா கடந்த 22ம் திகதி சனிக்கிழமை பிக்கரிங் நகரில் ஆரம்பமானது. காலை 11.00 தொடக்கம் இரவு 11.00 மணி வரை நடைபெற்ற இந்த அற்புதமான சிறுவர்களுக்கான விழாவில் கலை நிகழ்ச்சிகள் நடன நிகழ்ச்சிகள் மற்றும் வர்த்தக கண்காட்சி என கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தான பல நிகழ்வுகள் இணைக்கப்பட்டிருந்தன.

**LUCKY EXCLUSIVE FOUNDATION** அமைப்பின் சார்பில் பல தொண்டர்களின் ஆதரவோடு நிகழ்வு தொடர்ச்சியாக சிறப்பாக நகர்ந்து கொண்டிருந்தது. அடுத்த நாள் 23ம் திகதியும் அதே மண்டபத்தில் நடைபெற்றது. விழா நடைபெற்ற இடம்:- **Chestnut Hill Development Recreation Centre, 1867 Valley Farm Road. Pickering –** வாழ்த்த விரும்புவோர்:- 647 309 3091 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



# கனடாவில் மே 2024 ,ல் அதிகரித்த பணவீக்க விகிதம் ஜூலையில் குறையும் என்று எதிர்பார்க்கலாமா?

பல ஆண்டுகளாகரூபவ் கனடாவில் பணவீக்கம் கணிசமான அளவு உயர்ந்துள்ளதுரூபவ் ,தனால் கனடியர்களுக்கு வாழ்க்கைச் செலவு மற்றும் வீட்டு வசதிகள் தொடர்பான செலவுகள் அதிகரித்துள்ளதனால் அவர்கள் கவலைப்படுவதோடு பொருளாதாரம் சம்பந்தப்படட சவால்களையும எதிர் கொள்கின்றார்கள்.

,ந்த ஆண்டுரூபவ் ஏப்ரல் மாதத்தில் 2.7 சதவீதமாக ,ருந்த ஆண்டு விகிதம் மே மாதத்தில் 2.9 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.பகுப்பாய்வாளர்கள் பணவீக்கம் 2.6 சதவீதமாகக் குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள் ஆனால் அதிகமான சேவை விலைகள் அதிகரித்ததன் காரணமாக முடக்கம் அதிகரித்ததாக கனடாவின் புள்ளிவிவரங்கள் தயாரிக்கும் திணைக்களம் கூறியது. பணவீக்கம் தொடர்ந்து குறைந்து வருவதால் கனடா வங்கி தனது முதல் வட்டி விகிதக் குறைப்பை அறிவித்தது. அதிகரித்துவரும்வட்டிவிகிதங்கள்மற்றும்அதிகரித்து வரும் மக்கள்தொகை ஆகியன கனடா முழுவதும் வீட்டு வாடகை கட்டணங்களை அதிகரித்துள்ளதால் ஒன்றாரியோ வாழ் மக்கள் ,ப்போது வாடகைக்கு அதிக கட்டணம் செலுத்துகின்றனர். அடமான வட்டி ,ன்னும் பணவீக்கத்தில் முக்கிய பங்குவகிக்கின்றது என்பது ,ங்கு குறிப்பிடத்தக்கது. அடமான வட்டிகள் பல ஆண்டுகளாக 23.3 சதவீதம் அதிகரித்தனரூபவ் அதே நேரத்தில் வாடகை விலை 8.9 சதவீதம் அதிகரித்துள்ளது. ,தே நேரத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் கைத் தொலைபேசி சேவைகளுடன் தரைப் பயணம் மற்றும் விமானப் பயணங்களின் கட்டணங்களும் உயர்ந்துள்ளன. 2023 மே மாதத்துடன் ஒப்பிடும்போதுரூபவ் 2024 மே மாதத்தில் உணவுப் பொருட்களின் விலை 1.5 சதவீதம் அதிகரித்துள்ளது.



உணவுப் பொருட்களுக்கான செலவுகளில் முதல் அதிகரிப்பைக் குறிக்கிறது. 2020ஆம் ஆண்டை விட பொதுமக்கள் உணவுப் பொருட்களுக்கு செலவு செய்யும் பணம் 22.5 சதவீதம் அதிகமாகச் செலுத்துவதாக கனடா புள்ளிவிவரங்கள் திணைக்களம் தெரிவிக்கின்றது. அத்துடன் காய்கறிகள்ரூபவ் ,றைச்சிரூபவ் பழங்கள் மற்றும் மது அல்லாத பானங்கள் ஆகியவற்றின் விலைகள் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 6.4 சதவீதமாக உயர்ந்துள்ளன. 2023 உடன் ஒப்பிடும்போது பெட்ரோல் விலை 2024 ம் ஆண்டில் 5.6 சதவீதம் அதிகரித்துள்ளது. சந்தை ஜூலையில் விற்பனையில் 40 சதவீத சரிவை எதிர்பார்க்கலாம் என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் புள்ளிவிவரங்கள் திணைக்களமானது கனடா ,ன்னும் ஏப்ரல் மாதத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தித் தரவை அடுத்த வாரம் வரை ஜூலை 24 அன்று சமர்ப்பிக்கின்ற போதுதான் அடுத்த விகித முடிவு எடுக்கப்படும் என அறியப்படுகின்றது

# இவ்வருடத்திற்கான வென்மேரி விருதுகள் விழா கனடாவில் நடைபெறுகின்றது

கடந்த இரண்டு வருடங்களாக முறையே யாழ்ப்பாணம் மற்றும் பாரிஸ் ஆகிய நகரங்களில் நடைபெற்ற கனடாவை தளமாகக் கொண்ட வென்மேரி விருதுகள் வழங்கும் இவ்வருடத்திற்கான 3வது விருது விழா கனடாவின் அஜக்ஸ் மாநகரில் நடைபெறுகின்றது. எல்லாமாக 19 விருதுகள் வழங்கப்பெறவுள்ள இந்த விழாவில் மூன்று பெண்மணிகள் விருதுகள் பெறுகின்றார்கள்.

கனடா வாழ் நடன ஆசிரியை சாந்தா பொன்னுத்துரை அவர்களுக்கு ‘கலாபவனம்’ ஏரம்பு சுப்பையா ஞாபகார்த்த விருதும், இலங்கையின் முல்லைத்தீவு வாழ் ஓட்ட வீராங்கனை அகிலத்திருநாயகி ஸ்ரீ சயனணந்தபவன் அவர்களுக்கு முன்னாள்ன இலங்கை தேசிய உதைப்பந்தாட்ட வீரர் அந் எஸ். என். ஜே அந்தோனிப்பிள்ளை ஞாபகார்த்த விருதும். ஜேர்மனி வாழ் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் அவர்களுக்கு மூத்த திரைப்படக் கலைஞர் ஏ. ரகுநாதன் ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளன. ஈழத்தின் கர்நாடக இசையின் அடையாளம் என்று கருதப்படுபவரும் தற்போது கனடாவில் வாழ்பவருமான ‘இன்னிசை வேந்தர்’ பொன். சுந்தரலிங்கம் அவதர்களுக்கு இசைப் புலவர் தா. சண்முகரத்தினம் ஞாபகார்த்த விருதும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் உலகில் பல நாடுகளிலிருந்தும் வென்மேரி விருதுகளைப் பெற்றுக் கொள்வதற்காக பத்துக்கும் மேற்பட்ட விருதாளர்கள் கனடாவிற்கு வருகை தரவுள்ளதாக அறியப்படுகின்றது

கனடாவில் நடைபெறும் விருது விழா தொடர்பான ஏற்பாடுகளை கனடா வாழ் கவிஞரும் வென்மேரி அமைப்பின் நிறுவனருமான அனுரா அருளப்பு அவர்கள் செய்து வருகின்றார்.

மேலதிக விபரங்களுக்கு 647 854 2927 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



# சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரோ ஒருவரின் வெற்றிக்காக திரைமறைவில் சுமந்திரன் ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும்

**கே.பாலா**




எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கம் என்ற கோஷம் தொடர்பில் வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் சிவில் அமைப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவும் எதிர்பார்ப்பும் எதிர்பார்த்ததை விடவும் அதிகரித்து வரும் நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை எதிர்க்கும் இலங்கை தமிழரசு க்கட்சியின் சுமந்திரன் அணியும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் பகிரங்கமாகவே தமிழ பொதுவேட்பாளர் கோஷத்தை தோற்கடிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கம் ஏன்? அதன் அவசியம், அவசரம்,அரசியல், அனுகூலம் என்ன என்பது தொடர்பில் தெளிவாக விளக்கமளித்து அதற்கு ஆதரவாக தமிழ் கட்சிகள்.தமிழ் மக்களை ஓரணியில் திரட்டும் 'கல்லில் நாருரிக்கும்சுமுயற்சியில் தமிழ் சிவில் சமூகம் வெற்றியடைந்து வரும் நிலையில் தான் இலங்கை தமிழரசுக்கட்சியின் 'தனி ஒருவன் ஆன சுமந்திரன் எம்.பி. 'தமிழ் பொதுவேட்பாளர் என்ற கோமாளிக்கூத்துடன் எமக்கு உடன்பாடில்லை. இது ஒரு விஷப்பரீட்சை இதற்கெதிராக மக்கள் மத்தியில் இலங்கை தமிழ் அரசு கட்சி பிரசாரம்செய்யும் ' என விஷம் கக்கியுள்ளார்.

தமிழ் பொது வேட்பாளர் கோஷத்துக்கு எதிராக சுமந்திரன் எம்.பி. தரப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் மன்றில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்" எனும் தலைப்பிலான அரசியல் கருத்துக் கள நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போதே சுமந்திரன் எம்.பி. இவ்வாறு விஷம் கக்கியுள்ளதுடன் தமிழ் பொது வேட்பாளர் கோஷத்தை தோற்கடிப்போம் என்றவாறாக சவாலும் விடுத்துள்ளார். இதில் உரையாற்றிய சுமந்திரன் எம்.பி. அரசியல் அனுபவம் உள்ள ஒருவர். ஜனாதிபதி சட்டத்தரணி என்ற தனது ஆளுமைகளை மறந்து சிறுபிள்ளைத்தனமான, கோமாளித் தனமான சில கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார்.

இன்றைய காலகட்டத்திலே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற ஒரு தரப்பினர் தன்னோடு வந்து உரையாடியதாகவும் இப்படியாக ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருக்கின்றேன் என்று




**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெறுவார் என்று சுமந்திரனுக்கு யார் சொன்னது? சில வேளைகளில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெற்று விடுவார் என சுமந்திரன் அச்சமடைகின்றாரோ தெரியவில்லை. தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்பதற்கான தெளிவான விளக்கம் பல தடவைகள் பலராலும் வழங்கப்பட்டு விட்டது. அதனை விளங்கிக்கொள்ளும் அறிவு சுமந்திரனுக்கு இல்லையா அல்லது விளங்கிக்கொள்ள மறுக்கின்றாரா என்பது அவருக்கே வெளிச்சம்.**

கூறி அவர்களையும் இதில் பங்கு கொள்ளுமாறு அழைத்திருந்ததாகவும் தாங்கள் கலந்துகொள்வதாக தனக்கு அவர்கள் வாக்குறுதி அளித்து விட்டு பின்னர் அவர்கள் பின்வாங்கியதாகவும் தங்களின் குழு இந்த நிகழ்வுக்குப்போகக் கூடாது எனத் தீர்மானமொன்றை எடுத்திருப்பதால் தங்களினால் வரமுடியாது என அவர்கள் கூறியதாகவும் .இப்படி இவர்கள் ஒளித்து ஓடுவதற்கு என்ன காரணம் என்று தனக்குத் தெரியவில்லை எனவும் குறிப்பிட்டுருந்தார்.

அவர்கள் ஒரு குழுவாக எடுத்த தீர்மானத்திற்கு கட்டுப்படுகின்றார்கள். இது அவர்கள் தமது குழு மீதி வைத்துள்ள விசுவாசம். தமது முடிவில் உறுதியாக இருக்கும் ஒழுக்கம், ஒற்றுமைக்கு கொடுக்கும் மரியாதை. இது சுமந்திரன் எம்.பி.க்கு தெரியாதது பெரிய விடயம் அல்ல. ஏனெனில் தமிழரசு க்கட்சி மத்திய குழு எடுக்கும் எந்த முடிவுக்கும் கட்டுப்படாதவர் சுமந்திரன். ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழரசுக்கட்சி புறக்கணிக்கின்றது என மத்திய தழு முடிவெடுத்து அறிவித்தால் அதை மீறி தனி ஒருவனாக சென்று அந்த சந்திப்பில் பங்கேற்பவர் சுமந்திரன் .தமிழரசுக்கட்சிக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தி கட்சியை மரணத்தருவாயில் வைத்திருப்பதிலும் இவருக்கு பெரும்பங்குண்டு. அவ்வாறானவருக்கு சிவில் சமூகத்தின் இந்த ஒற்றுமை முடிவுக்கு கட்டுப்படும் ஒழுக்கம் புரியாதது ஒன்றும் புதினம் அல்ல.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் ஒரு தேவையில்லாத விஷப் பரீட்சை என்று நான் கூறுகின்றேன். ஒரு விஷப் பரீட்சையில் நாங்கள் ஈடுபட்டு அசைக்கமுடியாத இந்த மக்கள் ஆணையை இல்லை என்று நிறுவுவதற்கு நாங்கள் முயற்சி செய்கின்றோமா? தமிழ் மக்களின் அரசியல் த தலைவர்களாக அந்த விஷப் பரீட்சைக்கு நாங்கள் செல்லவேகூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எங்கள் இருப்பையே இல்லாமல் செய்யப்போகின்ற ஒரு நிகழ்வு. இதற்கு நாங்கள் இணங்கினால் இதுவரை காலம் வரைக்கும் எங்கள் உயிர் மூச்சு என்று செ ால்கின்ற எங்கள் இறைமை, எங்களுக்கான சுயநிர்ணய உரிமை அனைத்தையும் இல்லை என்று நாங்கள் செ ால்கின்றதான ஒரு செயற்பாடாகத்தான் இது இருக்கும் என்றும் சுமந்திரன் எச்சரிக்கின்றார்.

அப்படியானால் இதுவரை நடந்த ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்து தங்களது இறைமையை, சுயநிர்ணய உரிமையை பாதுகாக்க முடிந்ததா?அல்லது தமிழர்களின் இருப்பையாவது தக்க வைக்க முடிந்ததா? தமிழ் பொது வேட்பாளர் என்பது விஷப்பரீட்சை என்றால் சிங்கள வேட்பாளர் என்பது சுமந்திரனைப் பொறுத்தவரையில் இனிப்பான பரீட்சையா?சிங்கள வேட்பாளர்களுக்கு இதுவரை ஆணை வழங்கிய தமிழ் மக்களுக்கு அவர்கள் கொடுத்ததுதான் என்ன? நீங்கள் கைகாட்டிய சரத் பொன்சேகாவுக்கும் மைத்திரி பால சிறிசேனவுக்கும் தமிழ் மக்கள் வாக்களித்து கண்ட பலன் என்ன? அல்லது நீங்கள் பெற்றுக்கொடுத்த தீர்வுகள்தான் என்ன ? மைத்திரிபாலவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்க வைத்து எதிர்க்கட்சித்தலைவர் பதவியை பெற்றுக்கொண்ட உங்கள் பெரும் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் மக்களுக்காக ச ாதித்த விடயம்தான் என்ன? வேலைவாய்ப்பற்ற தமிழ் பட்டதாரிகள் 'ஜனாதிபதியுடன் பேசி எமக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தாருங்கள்சு எனக்கேட்டபோது 'அரசிடம் உங்களுக்கு வேலை வாய்ப்புக் கேட்டால் அது இனப்பிரச்சினைக்கான தீர்வில் பாதிப்பை ஏற்படுத்தும்சு என்று கூறியவரல்லவா உங்கள் பெருந்தலைவர்.

தேர்தல் என்பது அரசியல் செயற்பாடு அத்தகைய அரசியல் செயற்பாடு அரசியல் தலைவர்கள், அரசியல் கட்சிகள் முன்னெடுக்க வேண்டிய விடயம். இதில் சி வில் சமூகத்துக்குப் பொறுப்பு இருக்கின்றது.அவர்கள்

னை வரவேற்கத்தக்கது. ஆனால் இது ஒரு அரசியல் நிகழ்ச்சி.அந்த அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்கள் ஆணை எங்களுக்குத்தான் இருக்கின்றது. அந்தத் தீர்மானங்கள் எடுக்கின்ற பொறுப்பு எங்களுடைய கை களில்தான் இருக்கின்றது. அதனை நாங்கள் விட்டுவிட முடியாது.அப்படி விட்டுவிட்டால் எங்களுடைய பொறுப்பை நாங்கள் உதாசீனம் செய்தவர்களாவோம் எனவும் சுமந்திரன் வாதிடுகின்றார்.

அரசியல் நிகழ்ச்சிக்காக மக்கள் சிவில் சமூகத்தினரைத் தெரிவு செய்து அனுப்பவில்லை. எங்களைத்தான் தெரிவு செய்திருக்கின்றார்கள் என்று சுமந்திரன் கூறுவது உண்மைதான் .ஆனால் ரணிலுக்கு சஜித்துக்கு அநுரவுக்கு அவர்களது அழுக்காடைகளை தோய்க்கவோ, சாமரம் வீசவோ, சலுகைகளைப் பெறவோ.விசுவாசம் காட்டவோ நீதி அமைச்சு வெளிநாட்டு அமைச்சுப் பதவிகளுக்கு ஆசைப்படவோ அல்லது பேரம் பேசவோ

நிலைப்பாடு அல்ல. அது யாரோ செய்கின்ற கோமாளிக் கூத்து என்று நாங்கள் சொல்லக் கூடியதாகஇருக்க வேண்டும். இது பிரதானமான தமிழ்க் கட்சிஒன்றைச் சார்ந்தவன் என்ற வகையில்நான் சொல்கின்றேன் எங்கள் கட்சியினருக்கும்தான். இதற்கு எதிராக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய வேண்டிய பாரியபொறுப்பு எங்களிடத்தே இருக்கின்றது என்கின்றார் சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெறுவார் என்று சுமந்திரனுக்கு யார் சொன்னது? சில வேளைகளில் தமிழ் பொது வேட்பாளர் வெற்றி பெற்று விடுவார் என சுமந்திரன் அச்சமடைகின்றாரோ தெரியவில்லை. தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும். என்பதற்கான தெளிவான விளக்கம் பல தடவைகள் பலராலும் வழங்கப்பட்டு விட்டது. அதனை விளங்கிக்கொள்ளும் அறிவு சுமந்திரனுக்கு இல்லையா அல்லது விளங்கிக்கொள்ள மறுக்கின்றாரா என்பது அவருக்கே வெளிச்சம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கோஷத்தினால் சிங்கள ஜனாதிபதி



உங்களை தமிழ் மக்கள் தெரிவுசெய்யவில்லை. அதுமட்டுமல்ல தமிழ் தேசிக்கூட்டமைப்புக்கு ஆதரவளிக்க வேண்டுமென பாராளுமன்றத்தேர்தல் காலங்களில் உங்களுக்காக தமிழ் மக்களிடம் பிரச ாரம் செய்தவர்கள் சிவில் சமூகம்தான் உங்களுக்கு மக்கள் ஆணையை பெற்றுத் தந்ததில் சிவில் சமூகத் திற்கு பெரும் பங்குண்டு அதனை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆனால் நன்றி மறப்பது உங்களுக்கு கைவந்த கலைதானே?.

தமிழ் பொது வேட்பாளருக்கு எதிராக மக்களை விழிப்படையச் செய்ய வேண்டியது எங்களுடைய பொறுப்பு. நாங்கள் அதில் இருந்து ஒளிந்தோடப் போவதுமில்லை.அதற்காக உடனடியாகத் துரோகிப்பட்டம்கட்டிவிடுவார்கள். இப்போது துரோகிப் பட்டம் கட்டுவது மிக இலகு. அதற்கு இன்றைக்குப் பெறுமதியே இல்லாமல் போய்விட்டது. அவ்வாறு கட்டுவதானால் கட்டுங்கள். எதைச் செய்தாலும் பரவாயில்லை என்றும் சுமந்திரன் கூறுகின்றார்.

மானம் உள்ளவனுக்குத்தான் தனது கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால் கோபம் வரும். கற்புள்ளவளுக்குத்தான் தனது கற்பை இழிவு படுத்தினால் கொலைவெறி வரும். நாணயம் உள்ளவனுக்குத்தான் தனது நேர்மையை சந்தேகி த்தால் ஆத்திரம் வரும்.தேசப்பற்றுள்ளவனுக்குத் தான் தன்னை துரோகி எனக்கூறினால் சினம் ஏற்படும். அந்த வகையில் இவை எதுவுமே சுமந்திரனுக்கு ஏற்படாது என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

சரி ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினாலும் அதற்கு எதிராக நாங்கள் பிரசாரம் செய்ய வேண்டும் . அதுஏன் என்று கேட்டால் அவர் படுதோல்வி

வேட்பாளர்களை விடவும் சுமந்திரன் எம்.பி.தான் அதிக கலக்கமடைந்துள்ளார். இதற்கு இரு காரணங்கள் மட்டுமே இருக்க முடியும் .ஒன்று சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரோ ஒருவரின் தூண்டுதலில் இவ்வாறு செயற்பட வேண்டும். இரண்டாவது தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் வாக்குகள் தான் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு செல்லாது விட்டால் அவருடன் தான் செய்து கொண்டுள்ள 'எழுதப்படாத ஒப்பந்தம் நிறைவேறாமல் போய் விடுமோ என்ற அச்சத்தில் தமிழ் பொது வேட்பாளரை எதிர்க்க வேண்டும்.

If you're looking for a place to install or upgrade your radio, speakers, subwoofers, lights, remote starters, tracking devices and more; Look no further...

Storm Tech will take care of you with excellence and give you the best prices in Toronto

Feel free to contact us at 647-621-7725 for your free quotation!!

STORM TECH
Audio & Lights

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்ற நல்லாட்சி அரசாங்கத்தில் தான் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் சீனக் கடலட்டைப் பண்ணை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது ஆட்சியில் அதை அகற்றினோம் எனவும் தெரிவித்தார்.

15-06-2024 அன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளிநாடு ஒன்றில் இடம்பெற்ற சந்திப்பில் வடக்கில் கடல் அட்டைப் பண்ணைகளால் சூழல் சமநிலை பாதிக்கப்படுவதாக கருத்துத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடல் அட்டைப் பண்ணைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற நல்லாட்சி அரசாங்கத்தில் அமைத்தார்கள் அப்போது சிறிதரனுக்கு தெரியாதா?

எமது ஆட்சியில் அந்தப் பண்ணையை முற்றாக அகற்றியுள்ள நிலையில் தனது அரசியல் சுயலாபத்துக்காக வடக்கில் சீனர்களின் அட்டைப் பண்ண இருப்பதாக பொய் கூறி வருகிறார்.

தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்று தர போகிறோம் எனக் கூறி தமிழ் தலைமைகள் தமது சுயலாப அரசியலையும் உசுப்பேத்தி அரசியலையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பின்னோக்கிப் போவதற்கு தமிழ் தலைமைகள் பங்கு பிரதானம் அதை வரலாறுகள் உணர்த்தியுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் மீனவ சமூகங்கள் மத்தியில் குழப்பநிலையை ஏற்படுத்துவதற்கும் தனது வெளிநாட்டு நிகழ்ச்சிநிரலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கும் வடக்கில் சீனர்களின் அட்ட பண்ண இருப்பதாக வெளிநாட்டில் நின்று சிறிதரன் கூறுகிறார்

அவர் வெளிநாட்டில் நின்று பொய் கூறுகிற நிலையில் அவருக்கு நான் ஒன்றை கூறுகிறேன் வடக்கில் சீனர்களின் அட்டை பண்ண இருந்தால் காட்டுங்கள் நான் அதனை அகற்றுவதற்கு தயாராக இருக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.






# கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசு கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் நெருக்கடிகளுக்கு காரணங்களாகும்.

## Lesley Craig அம்மையாரிடம் வலியுறுத்திய எம்.பி. எஸ் கஜேந்தின்

கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசு கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணங்களாகும். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரத்தை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

.டுநளடநல ஊசயபை அம்மையார் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நா.உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.




யாழ்ப்பாணம் நகரிலுள்ள ஜெற்விங் (துநவறபைெ) விடுதியில் பொதுநலவாய அமைப்பின் தென் ஆசிய பகுதிக்குப் பொறுப்பதிகாரியான டுநளடநல ஊசயபை அம்மையார் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஆகியோருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நா.உ. செல்வராசா கஜேந்திரன் ஆகியோருக்குமிடையில் 25-06-2024 செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற சந்திப்பின் போது இவ்வாறு வலியுறுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்

கடந்த 75 வருடங்களாக இலங்கை அரசு கடைபிடித்துவரும் கொள்கைகளும், தீர்க்கப்படாமல் நீண்டு செல்லும் இனப்பிரச்சினையுமே இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிரதான காரணங்களாகும். இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் பொருளாதாரத்தை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

இலங்கையில் இனப்பிரசினைக்கான அடிப்படை காரணியாக அமைந்தது இலங்கையிலிருக்கும் 'ஒற்றையாட்சி' அரசியல் அமைப்பாகும். சிறிலங்கா அரசியலமைப்பில் 13 ம் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு முற்றுமுழுதாக நடைமுறையில் இருக்கும்போதே தமிழ்த் தேசம் மீதான இலங்கை அரசின் இனவழிப்பு நடைபெற்றிருந்தது.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு புரிந்த இனவழிப்புக்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை போன்றவற்றிற்கும் இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்தும் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் தமிழர் தேசம் மீதான கட்டமைப்புசார் இனவழிப்பும் தீவிரமடைந்து மீண்டும் இனமுரண்பாடுகள் வலுவடைந்து செல்வதற்கும் அடிப்படைக் காரணம் இதே ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பேயாகும்.

13 ம் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து, அதன் அதிகாரங்கள் குறித்து சிறிலங்காவின் மீயுயர் நீதிமன்றுகளில் ஏறத்தாழ 30 வழக்குகள் விசாரிக்கப்பட்டு அதன் தீர்ப்புகள் அனைத்தும், அரச கட்டமைப்பு ஒற்றையாட்சியாக இருக்கும் வரைக்கும், அனைத்து அதிகாரங்களும் , கொழும்பை மையப்படுத்திய மத்திய அரசிடமே இருக்கும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது, அதிகார பகிர்வுக்கு எதிராகவே நீதிமன்றங்கள் தீர்ப்புகளை அளித்திருக்கிறன.

உச்ச நீதிமன்று 13ம் திருத்த அதிகாரங்கள்

குறித்து இதுவரைகாலமும் வழங்கிய தீர்ப்புக்களின் அடிப்படையிலும், 13 ம் திருத்தமானது, சிறிலங்காவின் சட்ட வரம்புகளின் பிரகாரம் அது 'முழுமையாக' அமுல்படுத்தப்பட்டே உள்ளது.

இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கான வரைபைத் தயாரிக்கும் பணிகள் கடந்த 2016இல் ஆரம்பித்து - 2019 சனவரியில் நிறைவடைந்தது. அந்த வரைபானது தற்போதுள்ள ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை விடவும் மிகவும் இறுக்கமான ஒற்றையாட்சி கட்டமைப்புக்கான வரைபாகும். அரச கட்டமைப்பு ஒற்றையாட்சி அரசமைப்பாக இருக்கும் வரையில், அர்த்தமுள்ள சுயாட்சியை அனுபவிக்கவோ அல்லது சுயநிர்ணய உரிமையை உரியமுறையில் பிரயோகிக்கவோ முடியாது.

இந்த காரணிகளின் அடிப்படையிலே எமது அமைப்பானது, 13 ஆம் திருத்தினைத் தீர்வுக்கான ஆரம்ப புள்ளியாகவேனும் கருத்திலெடுக்க கூடாதெனும் நிலைப்பாட்டினை ஆரம்பம் முதல் உறுதியாகவுள்ளது.

ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் தமிழர்கள் நிராகரிப்பதுடன், தமிழர்தேசத்தை அங்கீகரித்து அதை பாதுகாக்கின்ற வகையிலானதும், தமிழர்கள் ஒருபோதும் இழக்கமுடியாத தங்களது சுயநிர்ணய உரிமையை, அனுபவிக்க கூடியதுமான ஒரு சமஸ்டித் தீர்வுக்கான தன் ஆதரவை வெளிப்படுத்தவேண்டும் எனவும் எமது அமைப்பு பிரித்தானியாவை கோரிநிற்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்குள் கடந்த 12 ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் விவகாரத்தினை அங்கிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

ஐநா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர் ஒருவரை இலங்கையின் பெயர்குறித்து வடக்கு கிழக்கு நிலைமைகள் தொடர்பான அறிக்கையிடலுக்காக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

கடந்த 14 ஆண்டுகளாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரதான அமர்வுகளில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் மீதான இடையீட்டு விவாதங்களின்போதான எந்தவொரு சந்தற்பத்திலும், இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பு யார் என்பதுபற்றி இதுவரை வெளிப்படையாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன் ஆனால் கடந்த 2024 மார்ச் 1 திகதி ஐநா மனித உரிமைகள் பேரவையில் மியன்மார் நாடு குறித்து பிரித்தானியா சமர்ப்பித்த அறிக்கையில் 6 தடவைகள் றோகின்யா இனத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே எதிர்காலத்தில் ஐ.ந மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானங்களில் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழ்கள் என்பதனைத் தெளிவாக குறிப்பிட பிரித்தானிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் அதேவேளை போரினால்

அழிவடைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் கடந்த 15 ஆண்டுகளாக இலங்கை அரசினால் முற்றாகப்

புறக்கணிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தினை போரால் பாதிக்கப்பட்ட பிராந்தியமாகப் பிரகடனம் செய்யவும் இப்பிரதேச அபிவிருத்திக்கென சர்தேச நிதி உதவியைப் பெற்றுத் தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்

தமிழர் தாயகத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ள சிங்களமயமாக்கல்களையும் பௌத்த மயமாக்கல்களையும் தடுத்து நிறுத்த உடனடி அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும்.


கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழர்கள் கைது செய்யப்படுவதும் சிறையிலடைக்கப்படுவதும் பொய் வழக்குகள் தொடர்வதும் இன்னமும் தொடர்கின்றது. இக்கொடிய சட்டத்தை நீக்க பிரித்தானிய அரசு அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 15 29 வருடங்கள் வரை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் 11 பேரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும். என்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டது.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலிலில் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் கேட்கப்பட்டபோது அதற்கு மாறி மாறி ஆட்சிப்பீடமேறும் ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தமிழர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளையும் கட்டமைப்புசார் இனவழிப்பையும் தீவிரப்படுத்திவரும் நிலையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை புறக்கணிப்பதென எமது அரசியல் இயக்கம் தீர்மானித்துள்ளது என்பதனையும் ஒற்றையாட்சி முறைமை ஒழிக்கப்படும் நிலையிலேயே முடிவு மறுபரிசீலனை செய்யப்படும் என்பதனையும் தெளிவுபடுத்தப்பட்டது என அவர் தெரிவித்தார்.

# உணவே மருந்து
## வாழ்வில் இயற்க்கையும் உணவையும் தேடி ஒரு பயணம்

நமது வாழ்க்கைப் பயணம் என்பது இயற்கையும் இறைவனும் நமக்கு கொடுத்த மிகப் பெரிய பொக்கிஷம்.அதில் நம் தலைமுறையினரும் நெடுந்தொலைவு பயணிக்க நமக்கு முக்கியமான தேவைகள் ஒன்று ஆரோக்கியம்.நமது ஆரோக்கியத்திற்காக நாம் உண்ணும் உணவில் ருசியை மட்டுமே நமது நாக்கு உணர்கிறது.அந்த உணவு நம் உடலுக்கு நன்மை பயக்குமா? அல்லது தீமை பயக்குமா? என்பதை அவரவர் மூளையே உணர்ந்து அதற்குரிய நன்மை, தீமைகளை தர முடியும்.



நமது பரிமாண வளர்ச்சியில் மிகவும் மேன்மைக்குரிய உயிரினமான மனிதன் மட்டும் தான் உடலின் நலத்திலும் சரி,மன நலத்திலும் சரி இப்போதுவாழ்கின்ற வாழ்க்கையில் மிகவும் கீழ் நிலையில் உள்ளான்.காரணம் பரிமாண வளர்ச்சியில் மனிதனுக்கு கீழான நிலையில் உள்ள பிற உயிரினங்களான ஊர்வன,பறப்பன,நடப்பன ஆகிய ஐந்து அறிவுள்ள ஜீவராசிகள் அனைத்தும் உடல் நலத்தில் மிக மேலான பண்புகளை பெற்று உயர்ந்த நிலையில் உள்ளன.காரணம் என்னவென்றால் அவைகள் அனைத்தும் இயற்கையான உணவுகள் அதாவது சமைக்காத இயற்கை உணவுகளை உட்கொள்கின்றன. அதற்கேற்றார் போல் அதனுடைய உடல் அமைப்பிற்கு ஏற்றார் போலும் உழைக்கின்றன. ஏற்ற சூழ்நிலைகளிலும் அவை வாழ்கின்றன.

ஆனால் மனிதர்களாகிய நாம் நம் உடம்பில் ஏற்ற உணவுகளை உண்பதில்லை. தக்க உழைப்பும் உழைப்பதில்லை. உடற்பயிற்சிகளும் செய்வதில்லை. தக்க சூழலிலும் வாழ்வதில்லை. நாக்கிற்க்கு சுவையாக உணவுகளை மட்டுமே தேடித்தேடி உண்பதால் பல நோய்களை உதாரணமாக உடலில் எத்தனை உறுப்புகள் உள்ளனவோ அத்தனை உறுப்புகளுக்கும் நோய்கள் உருவாகின்றன.நோய்களுக்கு ஏற்றார் போல் மருத்துவமனைகளும் மருத்துவர்களும், மருந்துகளும், கிடைக்கின்றன. அனைத்து மருந்துகளுமே வீரியம் அதிகம் உள்ளதால் அதற்கு உண்டான பின்விளைவுகளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.



அது மட்டும் இல்லாமல் தெருவிற்கு தெரு மருத்துவமனைகள் அதை ஒட்டி மருந்து கடைகள் முளைக்கின்றன.நம்முடைய உடல் மொழி சொல்வதையும் கேட்காமல் அதனை அடக்கியால மனிதன் பல தவறான முறைகளில் பயணித்து இறுதியில் வாழ்க்கை முழுவதும் மருந்துகளும் மாத்திரைகளுடன் வாழ்ந்து இறுதியில் நோயின்றி வாழவே முடியாது என்ற நிலையில் பழகி நோய் முற்றி மடிந்தும் போகிறான். ஆனால் ஆசைகளுக்கு மட்டும் குறை இல்லாமல் எத்தனை லட்சங்கள் சம்பாதிக்கலாம்? எத்தனை வீடுகள் வாங்கலாம்? எத்தனை கார்கள் வாங்கலாம்? என இவை அனைத்தும் பார்த்து பார்த்து வாங்கும் மனிதன், தன் விலை மதிப்பே இல்லாத நமது உடலில் ஆரோக்கியத்தை யார் சொல்வதையும் கேட்காமல் வாழ்க்கை “ சுய புத்தியும் இல்லாமல் “ கவனத்தில் கொள்ளாமல் இழக்கிறோம். உடல் எனும் அற்புத பொக்கிஷத்தை பல நோய்களுக்கு அர்ப்பணித்துவிட்டு பின் நிம்மதியின்றி உடல் ஆரோக்கியம் இல்லாமல், பிறர் பார்த்துக்கொள்வார்களா ? என்று ஏங்கி கொண்டு வாழ்க்கையை நகர்த்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தவிர கண் ,காது, பல், மூளைய ,இதயம், நுரையீரல், குடல் நோய், முதுகெலும்பு பிரச்சனை மற்றும் முடிவுகள் நரைமுடி வழுக்கை, நீரிழிவு, ரத்த அழுத்தம், வாதம் முதல் மிகவும் தாங்கிக் கொள்ள முடியாத எய்ட்ஸ் நோய், வெண்புள்ளி, யானைக்கால், புற்றுநோய் என இறுதியாக மிகப்பெரிய நோய்களுக்குள் மாட்டி வேதனைகளையும் அனுபவிக்கின்றோம்.






நம் தலைமுறையில் நம் குழந்தைகளுக்கு குழந்தை பேரின்மை போன்ற நோய்களால் பாதிக்கும் உள்ளாகிறோம். மனிதனுக்கு மட்டும் மேற்கூறிய அனைத்து நோய்களும் ஆளாகிறார்கள் இதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளும் அவனே முழு முதல் காரணமாக இருக்கின்றான் “வினை விதைத்தவன் வினை அறுப்பான், “திணை விதைத்தவன் திணை அறுப்பான், என்ற வாக்கியத்திற்கு ஏற்ப இறுதியில் எதை தின்றால் பித்தம் தெளியும் என்றுஅலைந்து கொண்டு இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

எனவே இனியாவது நம் வருங்கால தலைமுறையினர்கள் .அவர்களது வாழ்வியல் முறையில் சற்று முன்னோக்கி முற்போக்காக சிந்தித்து மனிதகுலம் மேன்மை அடைய சிறந்த எளிமையான மற்றும் இயற்கை சார்ந்த சிக்கனமான வாழ வழி தனக்குத்தானே மருத்துவம் செய்து கொள்வது. அதாவது தக்க உணவுகளை உண்ணவும், உடல் உழைப்பும், மிகச்சிறந்த ஓய்வுக்கான நேரத்தை ஒதுக்கியும், இயற்கையான முறையில் கிடைக்கும் உணவுகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை அதிகம் உட்கொள்ள வேண்டும். இப்படி மனிதன் எந்தவித உடல் மற்றும் மன நோய் இன்றி வாழ்ந்து பரிமாண வளர்ச்சியில் இதற்கு அடுத்த நிலையை “மனிதனும் தெய்வமாகலாம்” என்ற இறைநிலைக்கு “மரணம் இல்லாத பெருவாழ்வு “ வாழும் நிலைக்குச் செல்ல இயலும். நாம் நம்முடைய உணவு முறையில் வாழ்வியல் முறையிலும் எத்தகைய நோய் இருந்தாலும் முடிந்தவரை மருந்துகளை நாடாமல் வேறு வழியில்லாத பெரும் நோய்களுக்கு மட்டும் மருந்து உட்கொண்டே ஆக வேண்டும். என்ற சூழ்நிலையில் எடுத்தாக வேண்டும்.



ஆனால் நம் உடலுக்கு உகந்த மிகவும் ஏற்ற மிகு உணவாகிய நெருப்பில் இட்டு சமைக்காமல் உண்ணக்கூடிய இயற்கை அளித்த ஏராளமான உணவுகள் பல வகைகள் பச்சை காய்கறிகள், முளை வந்த தானியங்கள், நம்மால் இயன்ற பொழுதெல்லாம் உண்ண முயல வேண்டும் இயலாத போது சமைத்து உண்ணலாம். (தொடரும்

ஹெல்த் டிப்ஸ் by



ஜோ.பா. ராஜஸ்ரீ.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயத்தால் மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு குறித்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசியல் நலன் சார்ந்தே குறித்த விஜயம் அமைந்துள்ளது என தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் 20-06-2024 அன்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

இந்திய பிரதமரின் இலங்கை வருகையை ஒட்டி தனது அரசியல் இருப்பை நிலை நிறுத்திக் கொள்ளும் விவகாரத்திற்காக மன்னாரிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

காற்றாலை உற்பத்தியை இந்தியாவிற்கு வழங்குகின்ற விவகாரம் தொடர்பாகவும் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்திற்கான தரை வழி பாதை அமைப்பது சம்மந்தமாகவும் உரையாடிச் சென்றுள்ளார்.

அவருடைய வருகை அரசியல் ரீதியாக நிறைவேறி இருந்தாலும் மன்னார் மக்களுக்கு எவ்வித பலனும் கிடைத்ததாக தெரியவில்லை.

இங்குள்ள காணி விடுவிப்பு குறித்து எந்தவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கலந்து கொண்டிருந்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயத்தை வலிமையாக வலியுறுத்தவும் இல்லை.அவர்களும் ஆளும் கட்சி போல் ஜனாதிபதியின் நிகழ்வில் ஆசுவாசமாக கலந்து கொண்டு சென்றுள்ளனர்.

மன்னாரில் இனி புதிதாக குடியேறுவதற்கு எவ்வித காணியும் இல்லை.

வன இலாகா மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வையில் காடுகளை பாதுகாத்தல் ,விலங்குகளை பாதுகாத்தல், கரையோரத்தை பாதுகாத்தல் என்ற போர்வையில் சகல இடங்களையும் வர்த்த மணிக்கு உட்படுத்தப்பட்டு, மன்னாரில் மக்கள் குடியேறாத வகையில் ஒரு துண்டு நிலம் இல்லாத நிலையில் உத்தரவாதத்தை அரசு மீறி விட்டது.என தெரிவித்தார்.

# தமிழர் தரப்பின் பலவீனம் இலங்கை இந்திய அரசுகளுக்கு சாகமாக மாறியுள்ளதா?

சபா குகதாஸ்

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் அவர்கள் 21-06-2024 அன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மூன்றாவது முறை பதவி ஏற்ற பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் அயல் உறவுத்துறை அமைச்சர் கலாநிதி ஜெயசங்கர் உத்தியோகபூர்வ முதற் பயணமாக இலங்கை வந்து அனைத்து தரப்புக்களையும் சந்தித்துள்ளார்.

தமிழர் தரப்புடனான சந்திப்பு தமிழ் மக்கள் எதிர் பார்த்தது போன்று ஆரோக்கியமாக அமையவில்லை மாறாக ஜெயசங்கருடனான சந்திப்பில் ஒற்றுமையான நிலைப்பாட்டை கூட்டாக ஒரு தீர்மானமாக தெரிவிக்காக தவறியதுடன் ஜெயசங்கர் முன்னிலையில் ஒரே கட்சிக்காரர் முரண்பட்ட கருத்து விவாதத்தில் ஈடுபட்டதுடன் பிறிதொரு கட்சி 13 வது திருத்தம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் தேவையில்லை என்ற கருத்தையும் தெரிவித்தனர்.

இலங்கையின் சிங்கள ஆட்சியாளரை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல்வேறு வியூகங்களை வகுக்கும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தமிழர் தரப்பின் பலவீனம் வாய்ப்பாகவும் இரண்டாம் தரப்பின் நெருக்கடிகள் இன்றி இலங்கை அரசை நேரடியாக கையாள வழி சமைத்துள்ளது சம நேரத்தில் இந்திய அரசின் ஆதரவுடன் அழுத்தங்களை எதிர்பார்க்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழர் தரப்பின் நெருக்கடிகள் இல்லை என்ற நிலையும் உறுதியாகியுள்ளது.

கடந்தகால தமிழர் தரப்பின் இராஜதந்திர பலவீனத்தை கற்றுக் கொண்ட பாடமாக விளங்கி இலங்கை , இந்திய தரப்புக்களை தந்திரோபாய ரீதியில் கையாள தமிழர் பிரதிநிதிகள் ஒற்றுமையின்மையால் பலவீனப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலை எதிர் காலத்தில் எஞ்சி உள்ள தமிழர் இருப்புக்களை யுத்தம் மற்றும் சத்தமற்ற நிலையில் அழித்துவிடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடலில் இருக்கின்ற அனைத்து வளங்கள்,காற்றாலை மற்றும் கனிம வள மணல் அகழ்வு அனைத்துமே இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது

-இலங்கை ஜனாதிபதியின் மன்னார் விஜயம் குறித்து மீனவர்கள் கவலை.

நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப்படுத்தியதாக காணப்படுகின்றது.கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.காற்றாலை யாக இருந்தாலும் சரி கணிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.எதிர் வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது.அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும். அப்போது மீனவர்களே இறுதி முடிவு எடுப்பார்கள் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

-மன்னாரில் 21-06-2024 அன்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,,,, இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை நீண்ட புரையோடிப்போன ஒரு விஷயமாக உள்ளது.கடந்த வாரம் மன்னாருக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி அவர்களை சந்திப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதும் பயனளிக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மன்னார் விஜயம் எதற்கானது என்று கூட தெரியவில்லை.வடக்கில் உள்ள பல்வேறு வளங்களை எவ்வாறு அன்னியர்களின் கையளித்து எவ்வாறு இந்த நாட்டிற்கான வருவாயை பெற்றுக்கொள்ளலாம் என்பதே காரணமாக உள்ளது நிலமாக இருந்தாலும் சரி கடலாக இருந்தாலும் சரி இந்த இரண்டையும் மையப் படுத்தியதாக காணப்படுகின்றது.கடலில் இருக்கின்ற அனைத்து வளங்களும் இந்தியாவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.காற்றாலை யாக இருந்தாலும் சரி கணிய மணல் அகழ்வாக இருந்தாலும் சரி இந்தியாவிடம் கையளிக்கப்பட்டு விட்டது.

நாங்கள் மீனவர்களின் பிரச்சனையை கதைப்பதற்காகவே மாத்திரம் ஜனாதிபதியை சந்திக்க சந்தர்ப்பம் கோரினோம். எந்த அபிவிருத்திக்கும் நாங்கள் தடையானவர்கள் இல்லை.எமது வாழ்வாதார பிரச்சினையை கதைப்பதற்கு அவரை அணுகுகின்ற போது அவர் அதை தட்டிக் கழிக்கின்றார்.

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிற்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்ட போது அவரை சந்திப்பதற்கான எமது கோரிக்கை தட்டி கழிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களை ஏன் அவர் கண்டுகொள்ளவில்லை.வடமாகாணமும் மன்னார் மாவட்டமும் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. எதிர் வரும் மாதங்களில் ஜனாதிபதி தேர்தல் ஒன்று வரவுள்ளது.அப்போது இவர் மன்னாரிற்கு வந்து தான் ஆக வேண்டும். மீனவர்களிடம் வாக்கு கேட்கத்தான் வேண்டும்.மீனவர்களே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.




VIBRANT
HOSPITALITY
GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


KT GROUP
An Integrated Facilities Management Services Provider
Providing eco-friendly commercial cleaning services in Ontario to promote sustainability and maintain a spotless environment.
GME
Offering top-tier security solutions to ensure the safety and protection of businesses and properties throughout Ontario.
TOP DEFENCE
Delivering comprehensive employment services to connect job seekers with employers and support workforce development.
Specializing in professional restoration services to repair and rejuvenate properties after damage from water, fire, mold, or other disasters.
+1-866-686-9660
2283 Argentia Rd., Unit 16, Mississauga, ON, Canada, L5N 5Z2


SPECTRONX TECHNOLOGIES
IT Services & Solutions
Empowering Brands Digitally
Web Development
WebApp Development
Search Engine Optimization
Social Media Management
Branding
Data Analytics
Digital Marketing
+1-437-213-9525
info@spectronx.ca

# வட இலங்கையில் ஊடகவியலாளர்களை மிரட்டும் நோக்கம் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிசாரினால் பொய் வழக்குகள் பதிவு

ஊடகவியலாளர்களினால் ஐக்கியநாடுகள் சபையின் பொது செயலாளருக்கு மகஜர்!

ஐ.நாவிற்கு வழங்கப்பட்ட கடிதம்

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு மனு

பெறுநர்:
பொதுச் செயலாளர்
ஐக்கிய நாடுகள்
405 கிழக்கு 42வது தெரு
நியூயார்க், லேூ 10017, அமெரிக்கா

பொருள்: இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தீர்ப்பதற்கு அவசர நடவடிக்கை தேவை

பொதுச் செயலாளர் அவர்களே,

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக, இலங்கையின் வடக்கில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக எண்ணற்ற தாக்குதல்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்கள் நடந்தாலும், முறையான விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் நடைபெறவில்லை. இந்த தொடர்ச்சியான வன்முறை மற்றும் தண்டனையின்மை பல முக்கியமான சிக்கல்களை முன்னிலைப்படுத்தியுள்ளது

இலங்கையில் குறிப்பாக வட பிராந்தியத்தில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள் உங்களுக்கு மிகுந்த கவலையுடன் எழுதுகிறோம்.

பத்திரிகை சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் முக்கியமான தூணாக உள்ளது, அது சர்வதேச சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் அடிப்படை மனித உரிமையாகவும் உள்ளது. துரதிஸ்டவசமாக, இலங்கையில் குறிப்பாக வடக்கில் உள்ள ஊடகவியலாளர்கள் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர்

இது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்காக அவர்கள் ஆற்றவேண்டிய பணியை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதோடு சுயதணிக்கைக்கும் வழிவகுக்கின்றது.

இனந்தெரியாத நபர்கள் ஊடகவியலாளர்களைக் குறிவைப்பதால் அவர்கள் ஒருவகையான இனம்புரியாத அச்ச உணர்வில் வாழ்கிறார்கள், அவர்களால் தமது ஜனநாயகக் கடமையை செய்ய முடியவில்லை. இதனை தங்கள் மேலான கவத்துக்கும் நடவடிக்கைக்காகவும் கொண்டுவருகின்றோம்.

பின்னணி
கடந்த மூன்று தசாப்தங்களாக, இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் கவலையளிக்கும் வகையில் அதிகரித்து வருகின்றன.

இந்தத் தாக்குதல்களில் ஊடகநிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர் மீதான உடல்ரீதியான தாக்குதல்கள், கடத்தல்கள், மிரட்டல்கள், உடமைகளை சேதமாக்குதல், உறவினர்களை மிரட்டுதல், உயிர் ஆபத்து அச்சத்தை உருவாக்குதல், கொலைகள் என்பன அடங்கும்.

இந்தக் குற்றங்களைச் செய்பவர்கள் பெரும்பாலும் தண்டனையின்றி தப்பித்து சுதந்திரமாக தொடர்ந்து செயல்படுகிறார்கள், இதனால் பல ஊடகவியலாளர்கள் அச்ச உணர்வில் வாழ்கிறார்கள், சிலர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள்.

இதனால் நாட்டின் ஜனநாயகப்பணிக்கு தொடர்ந்து இடையூறு விளைவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தல், ஊழலை வெளிப்படுத்தல், மனித உரிமை மீறல்களை அறிக்கையிடுதல், பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை மக்கள் சார்பாக வெளிப்படுத்தல் பணிக்காக வட இலங்கையில் ஊடகவியலாளர்கள் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்கள் உடல்ரீதியான தாக்குதல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர். இதற்கு அண்மைய சமபவம் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. வட இலங்கையில் உள்ள ஊடகவியலாளர் பிரதீபனின் வீடு, இனந்தெரியாத நபர்களால் யூன் 13,2024 நள்ளிரவுத் தாக்கப்பட்டது.

இந்த சம்பவம் வடக்கில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான திட்டமிட்டு குறிவைக்கப்படும் இரகசிய மற்றும் தொடர்ச்சியான வன்முறை வடிவத்தின் ஒரு பகுதியாகும், இது மனித உரிமை மீறல்கள் மற்றும் பிற முக்கியமான பிரச்சினைகள் குறித்து வெளியுலகிற்கு தெரியப்படுத்துதல், மற்றும் குரலற்றவர்களின் குரலாக ஒலிப்பவர்களை திட்டமிட்டு அடக்குவதை நோக்கமாகக் கொண்டது.

பொய்யான போலீஸ் வழக்குகள் :
அண்மையகாலங்களில் வட இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீது மிரட்டும் நோக்கம் கொண்டு அவர்களைக் கட்டுப்படுத்தும் வகையில் பொலிசாரினால் பொய் வழக்குகள் பதிவு செய்யதல். நீதிமன்ற தடை உத்தரவுகள் பிறப்பித்தல் என்பன அதிகரித்துள்ளன. இந்த பொய் வழக்குகளை எதிர்கொள்வதற்கு ஊடகவியலாளர்கள் சிரமப்படுகிறார்கள்.

இதற்காக அடிக்கடி நீண்ட சட்டப் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது, நிதி நெருக்கடி மற்றும் சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள்.

போலீஸ் அச்சுறுத்தல்கள் மற்றும் கட்டுப்பாடுகள்:
ஊடகவியலாளர்கள் போலீஸ் அதிகாரிகளின் அச்சுறுத்தல்களையும் விசாரணை என்ற போர்வையில் துன்புறுத்தல்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்கொண்டுள்ளனர்,

இதில் அரசாங்க செயல்பாடுகள் குறித்து அறிக்கையிடுவதைத் தடை செய்வது உட்பட. இந்த வேண்டுமென்றே ஊடக வெளிப்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதால், ஊடகவியலாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய முடியாது கடுமையான தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இனந்தெரியாத ஆயுதக் குழுக்களால் அச்சுறுத்தல்:
ஊடகவியலாளர்கள் அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து அடிக்கடி அச்சுறுத்தல்களைப் பெறுகிறார்கள், இது ஒரு பரவலான பயம் மற்றும் ஜனநாயக நிச்சயமற்ற சூழலை உருவாக்குகிறது.

இந்த அச்சுறுத்தல்களில் பெரும்பாலும் உயிருக்கு அச்சுறுத்தல்கள் மற்றும் அவர்கள் தொடர்ந்து பொலிசில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமை, ஊடகவியலாளர்கள் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்ற எச்சரிக்கையையே சுட்டிக்காட்டுகிறது.

சமூக ஊடகங்கள் மூலம் அவதூறு:
இனந்தெரியாத நபர்கள் மூலம் சமூக ஊடக தளங்களில் ஒருங்கிணைந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதோடு அதனை நேரடித் தாக்குதலுக்கான விடயப்பொருளாக காண்பிக்க விளைவித்தல் போன்ற இரகசிய வேலைத்திட்டங்களையும் வடஇலங்கையில் இனங்காண முடியும்.

இது ஊடகவியலாளர்ளை அவதூறு மற்றும் மதிப்பிழக்கச் செய்யப்படுவதனூடாக அவர்களின் ஜனநாகப்பணியை செய்யவிடாது தடுத்தலாகும்

இந்த பிரச்சாரங்கள் அவர்களின் நற்பெயருக்கு களங்கம் மற்றும் அவர்களின் நம்பகத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதனூடாக அவர்கள் பணிசெய்யவிடாது தடுத்தலாகும்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல்:
வடக்கு பிராந்தியத்தில் இராணுவ வீரர்களின் இருப்பு மற்றும் செல்வாக்கு அச்சுறுத்தல் மற்றும் அச்சத்தின் சூழலுக்கு பங்களித்துள்ளது.
ஊடகவியலாளர்கள் இராணுவ உளவுத்துறையால் பின்தொடர்ந்து கண்காணிக்கப்படுவது அண்மைக்காலங்களில் வடக்கில் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இது அவர்களின் பாதுகாப்பின்மை உணர்வை அதிகரிக்கிறது மற்றும் சுதந்திரமாக அறிக்கை செய்யும் திறனைத் தடுக்கிறது.

சட்டம் மற்றும் ஒழுங்கின் தோல்வி:
முழுமையான விசாரணைகள் இல்லாதது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காதது சட்டம் மற்றும் ஒழுங்கில் பலவீனத்தையும் தோல்வியையுமே காட்டுகிறது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கும், குற்றவாளிகளுக்கு தண்டயையளித்தல், பொறுப்புக் கூறுவதற்கும் அதிகாரிகளின் இயலாமை அல்லது விருப்பமின்மை, குற்றம் செய்தவர்களை ஊக்குவிப்பதாகவுமே அமையும். தோடர் அவதானிப்பில் வடஇலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளை ஏற்படுத்துவதை அவதனிக்கலாம். இது வடஇலங்கையில் தொடர்ந்து வன்முறைக் கலாச்சாரத்தை வளரப்பதாகவே பார்க்கப்படக்கூடியது.

முடிவாக,
ஊடகவியலாளர்கள் மீதான திட்டமிட்ட தாக்குதல்கள், ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் ஜனநாயக அமைப்புகள் தோல்வியடைந்ததையும் இலங்கையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருப்பதையுமே காட்டுகின்றன.

இந்த சூழ்நிலையானது ஆரோக்கியமான மக்கள் ஜனநாயகத்திற்கும், அரசின் ஜனநாயகக் கோட்பாடுகளையும் சட்டத்தின் ஆட்சியையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

மேல்முறையீடு
மேற்கூறிய தகவல் பின்னணியில், பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை நாங்கள் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறோம்:

கண்டனம்:
இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைகளை பகிரங்கமாக கண்டித்து, அவர்களின் பாதுகாப்பை பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விசாரணை:
ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பான சுயாதீன விசாரணைகளை ஆதரித்தல் மற்றும் எளிதாக்குதல், பொறுப்பானவர்கள் பொறுப்புக்கூறப்படுவதை உறுதி செய்தல்.

கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்:
இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கான கண்காணிப்புப் பொறிமுறையை நிறுவுதல் மற்றும் சர்வதேச சமூகத்திற்கு தொடர்ந்து அறிக்கையிடுதல்.

ஊடகவியலாளர்களுக்கான ஆதரவு:
சட்ட உதவி, பாதுகாப்பான வீடுகள் மற்றும் அவசரகால பாதுகாப்பு வசதிகள், ஜீ.பி.எஸ் வசதிகள் உள்ளிட்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட முயற்சிகளுக்கு வளங்களையும் ஆதரவையும் வழங்குதல் வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டி காட்டப்பட்டுள்ளது




# யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இருபத்தைந்து ஆலயங்களை சீரமைப்பதற்கான அரசாங்கத்தின் உதவியை வழங்கிய அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒருதொகுதி ஆலயங்களை சீரமைத்து புனரமைப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நிதி ஒதுக்கீடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.





தமது ஆலயங்கள் மீள் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கான நிதியுதவியை பெற்றுத்தருமாறும் ஒருதொகுதி ஆலய நிர்வாகத்தினரால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.




இந்நிலையில் குறித்த தரப்பினருக்கான காசோலைகள் இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்து கலாசார திணைக்களத்தின் 2024 இற்கான நிதி ஒதுக்கீட்டின் ஊடாக கிடைக்கப்பெற்ற நிதியே குறித்த ஒரு தொகுதி ஆலயங்களுக்கு நிதியுதவியாக 15-06-2024 அன்று வழங்கி வைக்கப்பட்டன.
இதனடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட சுமார் 25 ஆலயங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# 2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் தீர்க்கமான ஒருமித்த முடிவுடன் வேட்பாளர் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்! பிரிந்து நிற்பது நமக்கே தோல்வி!

**பாலா – வவுனியா**

இலங்கையில் விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் அரசியல் பலத்தை காட்டுவதற்கான "தமிழ் பொது வேட்பாளர்"என்ற கோஷம் ஒரு புறம் பலம் பெற்று வரும் நிலையில் மறுபுறம் இந்த வேட்பாளர் கோஷத்தினால் தமிழர்களிடம் தற்போதுள்ள அரசியல் பலம் மேலும் பலவீனமாகும் வகையிலான தமிழ்தேசியக்கட்சிகளின் "விடாக்கண்டன் கொடாக்கண்டன் " நிலைப்பாடுகளும் அதிகரித்து வருவதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வடக்கின் வாக்குகள் சிதறப்போகும் தேர்தல் கள நிலைவரம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல்களைப் பொறுத்த வரையில் பிரதான இரு வேட்பாளர்களுக்கிடையில் தான் பலமான போட்டி இடம்பெறுவதுடன் இவ்விருவருக்கும்தான் பெரும்பான்மையான வாக்குகளும் அளிக்கப்படுவதும் வழமை. உதாரணமாக இறுதியாக 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் 15 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் இவர்களில் கோத்தபாய ராஜபக்சவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் தான் கடும் போட்டி ஏற்பட்டது .இவர்களில் கோத்தபாய ராஜபக்ச 69,24,255 வாக்குகளையும் சஜித் பிரேமதாச 55,64,239 வாக்குகளையும் பெற்ற நிலையில் 3 ஆம் இடத்தைப்பெற்ற அநுரகுமார திசாநாயக்க 4,18,553 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

ஆனால் இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கவுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ,எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச,ஜே .வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோரிடையில் கடும் போட்டி ஏற்பட்டு சிங்கள வாக்குகள் மூவருக்கும் சிதறடிக்கப்படுவதனால் மூவரில் எவருமே அறுதிப்பெரும்பான்மை வாக்குகளை பெற முடியாத சூழல் இருக்கும் நிலையில்தான் சிங்களவர்களின் வாக்குகளை விடவும் தமிழர்களின் வாக்குகளே அதிகளவில் சிதறப்போகும் நிலைமை வடக்கு,கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது.

இம்முறை நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்குகள் 3 ஆக பிளவடையப்போகும் நிலையில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு,ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவு சஜித் பிரேமதாசாவுக்கான ஆதரவு ,அநுரகுமார திசநாயக்காவுக்கான ஆதரவு, ஜனாதிபதித் தேர்தல் பகிஷ்கரிப்புக்கான ஆதரவு ,ஏனைய வேட்பாளர்களுக்கான ஆதரவு, வாக்களிப்பில் அக்கறையின்மையென 7 வழிகளில் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறப்போவதால் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருப்பார்களா என்ற சந்தேகம் வலுவாக எழுந்துள்ளது.

இறுதி வாக்காளர் கணக்கெடுப்பின்படி வடக்கு மாகாணம் 8,47,103 வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இதற்கமைய கடந்த 2019 ஜனாதிபதித் தேர்தலில் 6,00,236 வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்துள்ள நிலையில் இதில் கூட 14545 வாக்குகள் செல்லுபடியற்றதானதால் 5,85,691 வாக்குகள் மட்டுமே வடக்கு மாகாணத்தில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தன. இதில் சஜித் பிரேமதாசவுக்கு 4,87,461 வாக்குகள்,கோத்தபாய ராஜபக்சவுக்கு 49.950 வாக்குகள்,தமிழ் வேட்பாளராக போட்டியிட்ட சிவாஜிலிங்கத்திற்கு 8.140 வாக்குகள், ஏனைய

வேட்பாளர்களுக்கு 52.177 வாக்குகள் என வடக்கு மாகாண வாக்குகள் சிதறிப்போயிருந்தன.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ விடுதலை இயக்கம்,தமிழ்மக்கள் விடுதலைக்கழகம் .இலங்கை தமிழரசுக்கட்சி உள்ளிட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு வடக்கு ,கிழக்கு மாகாணங்களில் ஓரணியாக இருந்ததால் அதன் ஆதரவாளர்களின் வாக்குகள் அந்தக் கட்சி கை காட்டிய வேட்பாளருக்கே வழங்கப்பட்டன. தற்போது இந்த தமிழ் தேசியக்கூட்டமைப்பு பிளவடைந்து அதில் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஓரணி சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் மற்றைய அணியும் ஏனைய இரு கட்சிகளும் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டிலும் இருப்பதால் இவர்களின் ஆதரவாளர்களின் வாக்குகள் இரண்டாக பிளவடையப் போகின்றன. அது மட்டுமன்றி இந்த 3 கட்சிகளும் ஒன்றிணைந்த தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு தேசியத்தின் அடிப்படையில் கடந்த தேர்தலில் ஒற்றுமையாக வாக்களித்த வடக்கு,கிழக்கு தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் தற்போது அந்தக்கூட்டமைப்பு பிளவடைந்திருப்பதனால் ரணில், சஜித் , அநுர,தமிழ் பொது வேட்பாளர் ,ஏனைய வேட்பாளர்களென தாம் விரும்பியவாறு வாக்களிக்க எதிர்பார்க்கின்றனர்.

இதனை விட வடக்கை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யும் இரு எம்.பி.க்களைக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் அதேவேளை ஒரு எம்.பி.யைக் கொண்ட நீதியரசர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. அதேவேளை வடக்கில் வன்னி மாவட்டத்தில் தெரிவான இரு முஸ்லிம் எம்.பி.க்களில் ஒருவர் ஜனாதிபதி ரணிலையும் இன்னொருவர் சஜித் பிரேமதாசவையும் ஆதரிக்கின்றனர்.ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கஜன் இராமநாதன் இதுவரை யாருக்கு ஆதரவென அறிவிக்கவில்லை. அவருக்கும் வடக்கில் கிட்டத்தட்ட 50,000 வரையிலான வாக்குகள் உள்ளன.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் ஓரணி சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் தமிழீழ விடுதலை இயக்கம்,தமிழ் மக்கள் விடுதலைக்கழகம் ,தமிழ் மக்கள் தேசிய கூட்டணி,ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற கட்சிகள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் ஈ.பி.டி.பி.யும் முஸ்லிம் எம்.பி.க்களில் ஒருவரும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் இன்னொரு முஸ்லிம் எம்.பி.யின் கட்சி சஜித் பிரேமதசாவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் உள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம். பி. யான அங்கஜன் இராமநாதன் எந்தப்பக்கமும் சாராதுள்ள. அதேவேளை ஜே .வி.பி. தலைவர் அநுரகுமார திசநாயக்காவுக்கான ஆதரவுதளமும் வடக்கில் சற்று அதிகரித்தே காணப்படுகின்றது .

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த எம். பி.யான இரா.சாணக்கியன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

தமிழ் பொது வேட்பாளருக்கும் எதிரான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றார். அதே நேரம் தமிழரசுக்கட்சியின் கிழக்கு முக்கியஸ்தர்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். கலையரசன் எம்.பி நடு நிலை வகித்துவரும் நிலையில் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார். தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றது .இவ்வாறாக கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மக்களின் வாக்குகள் சிதறத்தான் போகின்றன



இவ்வாறு வடக்கு, கிழக்குமாகாணங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒவ்வொரு தமிழ் கட்சிகளும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருப்பதாலும் இதனால் வாக்காளர்களான மக்களும் குழம்பிப் போயுள்ளதாலும் வாக்குகள் சிதறுவதுடன் வாக்களிப்பு வீதமும் குறைவடையவே அதிக வாய்ப்புக்கள் உள்ளன. எனவே இன்னும் காலம் பிந்திவிட வில்லை என்பதனால் தமிழ் தேசியக்கட்சிகள் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்து தமிழ் மக்களை ஓரணியில் திரட்ட வேண்டும் . இல்லையேல் தமிழர்களின் அரசியல் இருந்த இடத்திலிருந்து இன்னமும் கீழ் நோக்கியே செல்லும். அதற்கான வழியை ஏற்படுத்தியவர்கள் என்ற வரலாற்றுப் பழியை தமிழ் தேசியக்கட்சிகளே சுமக்க வேண்டி ஏற்படும்.

# தர வரிசையில். கனடாவில் முதலிடத்திலும், வட அமெரிக்காவின் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்திலும், ரொறன்ரோ பல்கலைக்கழகம் இடம் பிடித்துள்ளது.

கனடாவில் எமது தமிழ் பேசும் மாணவ மாணவிகள் அதிகளவில் கற்றுவரும். ரொறன்ரோ பல்கலைக்கழகம் தர வரிசையில. கனடாவில் முதலிடத்திலும், வட அமெரிக்காவில் உள்ள பொதுப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்திலும், சமீபத்திய உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் உலகளவில் முதல் 25 பல்கலைக் கழகங்களிலும் இடம் பெற்றுள்ளது.

மிகவும் மதிக்கப்படும் வருடாந்திர தரவரிசையில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகின் முன்னணி பொதுப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாக தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு, வட அமெரிக்காவில் உள்ள பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திற்குப் பின்னால் உள்ளது.

உலகளாவிய தரவரிசையின் 21வது பதிப்பிற்கு ஞளு பரந்த அளவிலான பள்ளிகளை மாதிரியாகக் கொண்டு, 106 கல்வி முறைகளில் 1,500 பல்கலைக்கழகங்களின் வெளியிடப்பட்ட பட்டியலைத் தீர்மானிக்க மதிப்பீடு செய்த நிறுவனங்களின் எண்ணிக்கையை கிட்டத்தட்ட இரட்டிப்பாக்கியது.

மேல் மட்டத்தில் ஆசியா மற்றும் ஐரோப்பாவைச் சேர்ந்த பல்கலைக்கழகங்கள் தரவரிசையில் தொடர்ந்து ஏறி வருவதால், இந்த ஆண்டு தரவரிசையும் உயர்மட்டத்தில் ஒரு மறுசீரமைப்பைக் கண்டது. பல உயர்ந்த நிலையில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் இரட்டை இலக்க வீழ்ச்சியை சந்தித்தன, அதே நேரத்தில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆனது கடந்த ஆண்டை விட நான்கு இடங்கள் குறைந்துள்ளது.

முதலிடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க, ஆயளளயஉாரளநவவள ஐளெவவைரவந ழக வநஉாெடழபல, ஐஅிநசயைட ஊழடடநபந டுழனெழஜ மற்றும் ழுஒகழசன பல்கலைக்கழகம் தரவரிசையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்தன.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தோடு , மற்ற மூன்று கனேடியப் பல்கலைக்கழகங்கள் முதல் 100 இடங்களில் அடங்கும் இடங்களைப் பிடித்தன: மெக்கில் பல்கலைக்கழகம் (29வது), பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகம் (38வது) மற்றும் அல்பர்ட்டா பல்கலைக்கழகம் (96வது). என இந்த வரிசை அடங்குகின்றது




ரு.மு. பகுப்பாய்வு நிறுவனமான ஞரயஉ.ரயசநடடை ளுலஅழனௌ இன் மிகப் பெரிய தரவரிசை, ஜூன் 4 அன்று வெளியிடப்பட்டது மற்றும் கனடாவில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் முதல் இடத்தையும் 1,500 க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் 25 வது இடத்தையும் பிடித்தது.

ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் செயல்திறன் கல்வி நற்பெயர், உலகெங்கும் உள்ள வேலை வழங்குபவர்களின் நற்பெயர், வேலைவாய்ப்பு முடிவுகள், சர்வதேச அணுகல் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கான மதிப்பெண்களால் மதிப்பளிக்கப்படுத்தப்பட்டது -

“ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குகிறது, முக்கியமான புதிய ஆராய்ச்சிகளை உருவாக்குகிறது மற்றும் எங்கள் பட்டதாரிகளை கிட்டத்தட்ட ஒவ்வொரு துறையிலும் தலைமைத்துவத்திற்கு தயார்படுத்துகிறது என்பதை இந்த தரவரிசை மீண்டும் உறுதிப்படுத்துகிறது” என்று ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தலைவர் மெரிக் கெர்ட்லர் கூறினார்.

தரவரிசையில்ஒருபல்கலைக்கழகத்தின்ஒட்டுமொத்த மதிப்பெண்ணைக் கணக்கிட ஒன்பது எடையுள்ள குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. சர்வதேச அறிஞர்களின் கணக்கெடுப்பின் அடிப்படையில், கல்வி நற்பெயர் 30 சதவீதத்தில் அதிக எடையைக் கொண்டுள்ளது. அந்த முன்னணியில் ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகளவில் 11வது இடத்தைப் பிடித்தது.

உலகெங்கிலும் உள்ள வேலை வழங்குபவர்களின் கணக்கெடுப்பின் அடிப்படையில் 15 சதவீத மதிப்பெண்ணைப் பெற்ற ரொறன்ரோ பல்கலைக்கழகம் உலகத்தின் மொத்த வேலை வழங்குபவர்களின் நற்பெயருக்கான சிறந்த மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

இந்த தரப்படுத்தலுக்கு ஏற்றதாக கருதப்படும் மற்ற குறிகாட்டிகள் பின்வருமாறு: ஆசிரிய-மாணவர் விகிதம் ஒரு ஆசிரியருக்கு மேற்கோள்கள் சர்வதேச ஆசிரியர் சர்வதேச மாணவர்கள் சர்வதேச ஆராய்ச்சித் திட்டங்கள் வேலைவாய்ப்பு முடிவுகள் மற்றும் நிலைத்தன்மை, இதில் ரொறன்ரோ பல்கலைக்கழகம்

ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆனது. கனடாவில் முதலிடத்திலும், உலகளவில் முதல் 25 பல்கலைக்கழகங்களில் மிக நெருக்கமாகப் பார்க்கப்பட்ட ஐந்து சர்வதேச தரவரிசைகளிலும் இடம் பெற்றுள்ளது: வேர்ல்ட் யுனிவர்சிட்டி தரவரிசை, யு.எஸ். நியூஸ் ரூ வேர்ல்ட் ரிப்போர்ட்டின் சிறந்த உலகளாவிய பல்கலைக்கழகங்கள், டைம்ஸ் உயர் கல்வியின் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை, ஷாங்காய் தரவரிசை ஆலோசனையின் கல்வித் தரவரிசை உலக பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய தைவான் பல்கலைக்கழகம் உலக பல்கலைக்கழக தரவரிசையில் சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ எந்த தமிழ்தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, எதிர்பார்க்கமுடியாது

மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ நேர்மையையோ எந்த தமிழ்தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவர்களிடமோ நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் எம்மை விட்டு பிரிந்தாலும் அவருடைய நேர்மையான தமிழ்த்தேசிய அரசியல் கொள்கையை அவருடைய அன்பு மனைவி, மற்றும் பிள்ளைகள், முன்கொண்டு செல்வது வடகிழக்கு தமிழ்த்தேசிய அரசியலுக்கு பக்கபலமாக உள்ளது என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

நடராஜா ரவிராஜ் அவர்கள் உயிருடன் இருந்திருந்தால், 25 ஜூன் அன்று அவருக்கு 62,வயதாகும். ஆனால், கடந்த 2006, நவம்பர்,10ம் திகதி அவரது 44வது வயதில், மகிந்தராசபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில், சிங்கள பேரினவாதத்தால் திட்டமிட்டு, அவர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சோகம், கொழும்பில் அரங்கேறியது.

தமிழரசு கட்சிக்குள் குத்து வெட்டுக்கள் இருந்திருக்காது

அவர் இன்று இருந்திருந்தால் 17, வது இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் மகாநாடு எந்த இடையூறுகள், குத்து வெட்டுகள் இன்றி அவரே தலைவராக நிச்சயமாக பேராதரவுடன் தெரிவாகி இருப்பார். தனது மக்களின் விடிவிற்காக தனது உயிரையே கொடுக்க தயாராக இருந்த ஒரு தலைவர் மத்தியில் இன்று தங்களுடைய தங்களுடைய சுய நலனுக்காக நடிப்பு அரசியல் செய்து வாக்கு வங்கிகளையும் நிரப்பும் நோக்கில் செயற்படும் தமிழ்தேசிய அரசியல் வாதிகள் கட்சியின் தலைவர்கள் மாமனிதர் ரவிராஜ் அவர்களின் அரசியல் பயணத்திலிருந்து இருந்து பெற வேண்டிய பெறுமதியான படிப்பினைகளை உள்வாங்குவதில் தவறிவிட்டார்கள்.

இன்று தமிழரசுக்கட்சியை நீதிமன்றில் நிறுத்திய நிலைமை அவர் இருந்திருப்பின் ஏற்பட்டிருக்காது. தமிழ்த்தேசிய அரசியல் செயற்பாடுகள் உயிர்புடன் ஒற்றுமையாக முன்நோக்கி சென்றிருக்கும் என்பதில் எந்த மாற்றுக்கருத்துகளும் இருந்திராது.

அவர் தந்தை செல்வாவின் அகிம்சைப்போராட்ட அரசியலையும், தலைவர் பிரபாகரனின் ஆயுதப்போராட்ட அரசியலையும் நேசித்தார்.

மாமனிதர் ரவிராஜின் முன்மாதிரி

மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ நேர்மையையோ எந்த தமிழ்தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, அதன் தலைவர்களிடமோ நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் எம்மை விட்டு பிரிந்தாலும்

அவருடைய நேர்மையான தமிழ்த்தேசிய அரசியல் கொள்கையை அவருடைய அன்பு மனைவி, மற்றும் பிள்ளைகள், முன்கொண்டு செல்வது வடகிழக்கு தமிழ்த்தேசிய அரசியலுக்கு பக்கபலமாக உள்ளது என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

யாழ்ப்பாணம் தென்மராட்சி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட ரவிராஜ் யாழ்ப்பாணம் டிறிபேர்க் கல்லூரி மற்றும் யாழ் பரி யோவான் கல்லூரிகளில் கல்வி கற்றார். அன்பு மனைவியாக சசிகலா அவர்களை திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளின் தந்தையாக வாழ்ந்தார். இவர் 1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதிவு செய்தார். ரவிராஜின் "ரவிராஜ் அசோசியேட்ஸ்" எனும் சட்ட நிறுவனமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகள், அவசரகாலச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்காக வாதாடியது. கொழும்பில் மனித உரிமைகள் சட்டத்தரணியாகவும் பணியாற்றினார்.

2004, ல் 22, தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் மாமனிதர் ரவிராஜ் அவர்களும் எங்களுடன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வேளையில் 2004, ல் தேர்தல் இடம்பெறுவதற்கு மூன்று வாரத்துக்கு முன்னமே விடுதலைப்புலிகளுக்குள் பிழவு ஏற்பட்டு அதில் இருந்து கருணா என்பவனும்,சிலரும் விலகி கிழக்கில் பிரதேசவாத அரசியலுடன் தமிழ்தேசிய அரசியலுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் தமிழ் ஆயுதக்குழுக்களாக இவர்களை பயன்கடுத்தி ஆட்சியாளர்களின் அனுசரணையுடன் படுகொலைகளும் இடம்பெற்றமையால் 22, பாராளுமன்ற உறுப்பினர்களும் சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாமல் கொழும்பில் ஜெயவர்தன புர பாராளுமன்ற உறுப்பினர் விடுதி அமைந்த மாதிவெலயில் தங்கியிருந்த காலமாகும்.



மட்டக்களப்பு வாகரை மக்கள், மீதான எறிகணை தாக்குதல்

அந்தவேளையில்தான் 2006,யூலை மாதம் திருகோணமலை மாவிலையாற்றில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் ஆரம்பிக்கப்பட்டு திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த சம்பூர் மூதூர் பகுதி மக்கள் மட்டக்களப்பு வாகரையில் தஞ்சம் அடைந்திருந்தனர். 2006,நவம்பர் 8,ம் திகதி வாகரையில் அகதிமுகாம்களில் தங்கி இருந்த அப்பாவி பொது மக்கள் மீது இராணுவம் மேற்கொண்ட எறிகணை தாக்குதலால் 35 பொதுமக்கள் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயமடைந்தும் இருந்தனர். மறுநாள் 2006,நவம்பர்,9ம் திகதி காலை 9, மணிக்கு கொழும்பு நகரில் ஐ.நா செயலகத்திற்கு முன்பாக, இராணுவம் மேற்கொண்ட அத் தாக்குதலை கண்டித்து ஒரு

கவன ஈர்ப்புபோராட்டத்தை நடத்தினோம். இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தவர் மாமனிதர் ரவிராஜ தான்.

இந்தப்போராட்டம் இடம்பெற்று நாம் கலைந்து செல்லும்போது மாமனிதர் ரவிராஜ் என்னிடம், மச்சான் நாளை நானும் நீரும் வாகரைக்கு போவோம் எவரிடமும் கூறாமல் திடிரென வாகரைக்கு சென்று அங்கு உயிர் இழந்த மக்களையும் காயப்பட்ட மக்களையும் நேரடியாக பார்த்து வருவோம் நான் நாளை காலை 9, மணிக்கு மாதிவெல விடுதிக்கு வருவேன் ஆயத்தமாக இரு எனது வாகனத்தை மட்டும் கொண்டு செல்வோம் உனது வாகனம்உனது பொலிசார் தேவையில்லை என கூறினார்" நானும் உடனே சம்மதித்து மறுநாள் வாகரை செல்வதற்காக 2006, நவம்பர், 10, ம் திகதி தயாராக இருந்தேன்.

நவம்பர்,10,ம் திகதி காலை 7 மணி தொடக்கம் 8

மணிவரை "தெரண" தொலைக்காட்சிக்கு மாமனிதர் ரவிராஜ் நேர்காணல் அளித்தார். அதுதான் அவர் இறுதி நேர்காணலில் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு பிரச்சனை பற்றியும் தனது ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைத்திருந்தார். அந்த நேர்காணலை முடித்து விட்டு திரும்பவும் அவருடைய வீட்டில் கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்ரவுனில் உள்ள அவரது வீட்டில் இருந்து அவரது சிவப்பு நிற ஜீப் வண்டியில் என்னை ஏற்றுவதற்காக ஸ்ரீ ஜெயவர்தனபுர மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் விடுதிக்கு வரும்போதே 2006, நவம்பர் ,10, வெள்ளிக்கிழமை காலை 8.15, மணியளவில் அவர்மீது மீது கொலைகார கும்பல்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபொது ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிழந்தார்.

பின்னர் மாமனிதர் ரவிராஜ் படுகொலையைக் கண்டித்து கொழும்பில் திங்கட்கிழமை 2006, நவம்பர்,13, ல் பாரிய கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர். இப்பேரணியில் அனைத்து மூன்று இன மக்களும் வேறுபாடுகள் இன்றி அரசியல், மதத் தலைவர்கள் பொதுமக்கள் என பலதரப்பட்டவர்களைம் கலந்து கொண்டனர்.

தேசியத் தலைவர் வழங்கிய மாமனிதர் கௌரவம்

தேசியதலைர் பிரபாகரன் அவர்களால் தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டார். தேசியதலைவருடைய அந்த அறிக்கையில் "நடராஜா ரவிராஜ் அவர்கள் ஒரு அற்புதமான மனிதர், அபூர்வமான குண இயல்புகளைக்கொண்டவர், பந்த பாசங்களுக்கு அடிமைப்பட்டு பொருள் உலகால் ஆட்டிப்படைக்கும் ஒரு பொம்மை மனிதரல்ல அவர் தமிழீழ மக்கள் மீதும், மண்மீதும் ஆழமான பற்றும் பாசமும் கொண்டவர்" என அறிக்கையில் குறிப்பிட்டு மாமனிதர் மதிப்பை வழங்கி இருந்தார்.

உண்மையில் துடிப்புள்ள நாடாளுமன்ற உறுப்பினராக என்னுடன் பயணித்த காலத்தை மறுக்கமுடியாது தனக்கு வாக்களித்த யாழ்மாவட்ட மக்களின் அபிலாசைகளை கருத்தில் கொண்டு இன ஒற்றுமையை மனதில் கொண்டு போராடிய ஒரு தலைவரே மாமனிதர் ரவிராஜ்.

# “மன்னார் மாவட்டத்தின் முக்கியமான வாழ்வாதார தொழிலான விவசாயத்தை விருத்தி செய்ய பல் சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம்.”

## மன்னார் அரசாங்க அதிபர் எடுத்துரைப்பு.

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் முக்கியமான வாழ்வாதார செயல்பாடாக விவசாயம் காணப்படுகின்றது.விவசாயத்தை விருத்தி செய்ய பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம்.. இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது.மீள் குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர் நோக்குகின்ற முக்கியமான பிரச்சனையாக பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கு ஜனாதிபதியின் ஏற்பாட்டில் குறித்த குழு இன்றைய 25-06-2024 செவ்வாய்க்கிழமை மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.



மன்னார் மாவட்டச் செயலகத்தில் அன்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் பிரதேசச் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள தலைவர்களை உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கான குழுவினர் சந்தித்து கலந்துரையாடி உள்ளனர்.

இதன் போது மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து குறித்த குழுவினர் கலந்துரையாடி உள்ளனர்.

இதன் போதே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த குழுவினரிடம் குறித்த பிரச்சினையை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

-நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது. மீள்குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர் நோக்குகின்ற முக்கியமான பிரச்சனையாக பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முக்கியமான வாழ்வாதார செயல்பாடாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாயத்தை விருத்தி செய்ய பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வன வள திணைக்களம்,வன ஜீவராசிகள் திணைக்களம் கிட்டத்தட்ட 36 வீதம் காணிகளை பிடித்துள்ளனர்.



மேலதிகமாக புதிதாக 30 வீத காடுகளை உருவாக்கி உள்ளனர்.இவர்கள் ஜீ.பி.எஸ். மற்றும் கூகுள் படம் ஊடாக கூடுதலான நூறுக்கு மேற்பட்ட விவசாய குளங்களை தமது எல்லைக்குள் அடையாளப்படுத்தி உள்ளமையினால் விவசாய அபிவிருத்தியை புனரமைப்பு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறிய பின்னர் தமது விவசாய நிலங்களை மீள பெற்றுத்தருமாறு கோருகின்றனர்.

அதன் அடிப்படையில் குறிப்பிட்ட விவசாய நிலங்கள் தற்போது வன வள திணைக்களத்திடம் இருந்து மீள பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் மீள்குடியேறி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.



நல்லிணக்க அடிப்படையில் அவர்களின் நிலங்களை மீள வழங்குவதில் நாங்கள் சவால்களை எதிர் நோக்குகிறோம்.1980 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்ததன் காரணமாக பொது மக்களினால் பயன்படுத்தப்பட்ட இடங்கள் கூட சிறு காடுகளாக காணப்படுகிறன.

இதன் காரணமாக 12 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தை குறித்த திணைக்களத்திடம் உரிய ஆதாரத்துடன் சமர்ப்பித்து பொது மக்களின்
1500 ஹெக் டயர் காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களினால் அடையாளம் காணப்பட்ட ஏனைய நிலங்களை விடுவிக்க முடியாத நிலை காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த குழுவினர் அரச அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள்,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உட்பட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உத்தேச சட்ட வரைவு குறித்து கலந்துரையாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# MPP Logan Kanapathi for Markham-Thornhill, hosted his Community BBQ on June 27th at ‘SIMONSTON PARK’ IN MARKHAM

மார்க்கம் தோன்ஹில் தொகுதியின் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் ஏற்பாடு செய்த சமூக ஒன்று கூடல் வியாழக்கிழமை 27ஆம் தேதி மார்க்கம் நகரில் உள்ள **SIMONSTON PARK** சிறப்பாக நடைபெற்றது. மாகாண அமைச்சர் மற்றும் ஏனைய மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் மூத்தோர் கழகங்களின் உறுப்பினர்கள் என நூ றுக்கணக்கானவர் கலந்துகொண்டு அங்கு இடம் பெற்ற கலை நிகழ்ச்சி மற்றும் கலந்துரையாடல் போன்றவற்றில் பங்கெடுத்தனர் மற்றும் சிற்றுண்டிகள் மற்றும் ஐஸ்கிரீம் போன்றவையும் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட





# தான் ஒரு 'துரோகி'யென மீண்டும் நிரூபித்துள்ள 'கருணா' என்னும் விநாயகமூர்த்தி

**ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச ,அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து பிரசாரங்களில் ஈடுபட்டபோதும் கருணாஅம்மான் தலைகாட்டவில்லை .கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த நிலையிலேயே வெளியே வந்த கருணா அம்மான் கூட்டமொன்றில் பேசுகையில்,**

**"விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ,தமிழர் போராட்டத்தை தமிழ் மக்களை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ,முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிக்கொடுத்து துரோகம் செய்த கருணா அம்மான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தனது மைத்துனரான அலிசாஹிர் மௌலானாவையும்அன்வர் ஹாஜியாரையும் ஈட்டிக்கொடுத்துள்ளார்" ன கூறி காட்டிக்கொடுத்துள்ளார்.**

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அதன் தலைவர் பிரபாகரனுக்கு அடுத்த இடத்தில் இருந்தும் பிரபாகரனுக்கு அடுத்தவராக தமிழ் மக்களினால் நேசிக்கப்பட்டும் போர்களை நடத்துவதில் சிறந்தொரு தளபதியாக செயற்ப ட் டும் விடுதலைப்புலிகளினாலும் தமிழ் மக்களினாலும் "கருணா அம்மான்"என அன்புடன் அழைக்கப்பட்டும் வந்த நிலையில் பிரபாகரனுக்கு மட்டுமன்றி தமிழ் மக்களுக்கும் செய்த துரோகம் ,காட்டிக்கொடுப்பினால் இன்றுவரை "துரோகி"என அடையாளப்படுத்தப்பட்டு வரும் விநாயகமூர்த்தி முரளிதரன் என்னும் கருணா அம்மான் மீண்டும் ஒரு காட்டிக்கொடுப்பை செய்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தலைவரையும் தமிழ் மக்களையும் காட்டிக்கொடுத்த கருணா அம்மான் 20 வருடங்கள் கழித்து தற்போது பிரபாகரனையும் தமிழ் மக்களையும் தான் காட்டிக்கொடுக்கக் காரணம் தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கதான் என பொது வெளியில் பகிரங்கமாகக்கூறி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தன்னை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்து வந்தவர்கள் அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சியின் எம்.பி.யும் தற்போதைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி.யுமான அலிசாஹிர் மௌலானாவும், இன்னொருவரான அன்வர் ஹாஜியாரும்தான் எனவும் கூறி காட்டிக்கொடுத்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் காலத்தில் கருணா அம்மான் தியாகத்தினதும் வீரத்தினதும் புகழினதும் உச்சியில் இருந்தவர். இலங்கை இராணுவத்தினருக்கும் இராணுவத்தளபதிகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர். 1983 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்ட விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு விடுதலைப்புலிகளின் தலைவர் வைத்த பெயர்தான் கருணா அம்மான். 20 ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து தமிழீழ விடுதலைக்காகப் போராடியவர்.விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண விசேட கட்டளைத் தளபதியாக செயற்பட்டவர். சந்திரிகா -ரணில் அரசில் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தைக் காலத்தில் வெளிநாடுகளுக்கு சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவர்.

அப்போது அரசுடனும் புலனாய்வுத்துறையினருடனும் ஏற்பட்ட இரகசிய உறவின் காரணத்தால் "விடுதலைப் புலிகள் கிழக்கிலங்கைப் போராளிகளுக்கு அவர்களது அமைப்பில் தகுந்த மதிப்பு, வாய்ப்புக்கள் தருவதில்லை , கிழக்குப் போராளிகள் பயன்படுத்தப்பட்டு வீணாக பலியிடப்பட்டனர் "என்று புலிகளின் தலைமை மீது குற்றம்சாட்டி பிரதேசவாதக் கருத்தை முன்வைத்து பிரபாகரனுக்கும் தமிழ் மக்களுக்கும் போராட்டத்தில் விதையான ஆயிரக்கணக்கான மாவீரர்களுக்கும் போராடிக்கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான போராளிகளுக்கும் துரோகம் செய்து காட்டிக்கொடுத்து விட்டு 2003 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி அரசின் அதி உச்ச பாதுகாப்பில் கொழும்பிலும் பின்னர் வெளிநாடுகளிலும் வாழ்ந்த நிலையில் மீண்டும் இலங்கை திரும்பினார் .

தனது மாகாணமான கிழக்கு மாகாணத்திற்கு திரும்பியகருணா அம்மான்"தமிழீழமக்கள்விடுதலைப் புலிகள்" எனும் புதிய அரசியல் கட்சியை உருவாக்கி அதன் தலைவராக தன்னை அறிவித்துக்கொண்டு இலங்கை அரசின் ஆதரவாளராக செயல்படத் தொடங்கினார்.ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டபின்னர் இலங்கை அரசியலில் நுழைந்த கருணா அம்மான் 2008 அக்டோபர் 7 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் இலங்கை பாராளுமன்றத்தின் எம்.பி.யாக பதவியேற்றுக்கொண்டார். அதே ஆண்டு தேசிய நல்லிணக்க மறுசீரமைப்பு அமைச்சராகவும் பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில் 9 மார்ச் 2009 ஆம்திகதி தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியிலிருந்து விலகி மைத்திரி பாலசிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார்.அவருக்கு அக்கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக பதவி வழங்கப்பட்டது.



ஆனால் காட்டிக்கொடுப்புக்கும் துரோகத்துக்கும் பெயர்பெற்றவரான கருணா அம்மான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனாவையும் அவரது கட்சியையும் காட்டிக்கொடுத்துவிட்டு மஹிந்த ராஜபக்ஸ தரப்புக்கு தாவினார். மீண்டும் 2010 ஆம் ஆண்டு தேசியப்பட்டியல் ஊடாக எம்.பி.யான அவருக்கு மீள்குடியேற்ற பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அப்போதும் அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது விடுதலைப்புலிகளுக்கு இந்திய இராணுவ காலத்தில் உதவிய அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவையும் காட்டிக் கொடுத்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போது ஐ.தே .க எம்.பி.யான சுஜீவ சேனசிங்க முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது,

"சுஜீவ சேனசிங்க எம்.பி. எப்பொழுது பார்த்தாலும் என்னுடைய பெயரைக் பாராளுமன்றத்தில் குறிப்பிடும் போது 'கருணா அம்மான் அரசாங்கத்துடன் இணைந்துள்ளார்' , 'கருணா அம்மான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்துள்ளார்' என்றெல்லாம் குறிப்பிடுகிறார். ஆம் அது மிகவும் சரியானது. இந்நேரத்தில் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன், அது என்னவென்றால் தற்போது இங்கு எமக்கு முன்னால் இருக்கின்ற ஜே.வி.பி கட்சியினர் மற்றும் தமிழ்தேசிய கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் இருக்கும் போது ஏன் நான் இருக்கக்கூடாது.

நான் வரலாற்றினை தற்போது சிறிதளவில் கூற விரும்புகிறேன். சிரேஷ்ட எம்.பி.க்களான ஜோன் அமரதுங்க லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் இங்கு அமர்ந்துள்ளனர். அவர்களுக்கு வரலாற்றில் இலங்கையில் என்ன நடந்தது என்பது பற்றி தெளிவாக தெரியும். எனினும் வரலாற்றினை நானும் கொஞ்சம் தட்டிப்பார்க்க விரும்புகிறேன். உதாரணமாக 1989 ஆம் ஆண்டில் இந்திய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பின்னர் 350 விடுதலைப்புலிகள் இயக்கத்தினரே எஞ்சி இருந்தனர். ஏனையோர் அனைவரும் இறந்தும் இயக்கத்தினை விட்டும் சென்றுவிட்டனர்.

அப்போது எமது நாட்டின் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சியிலிருந்தார். நாட்டை ஒழுங்கமைப்போடும் சிறப்போடும் கொண்டு செல்லும் பணி அவரது கையில் காணப்பட்டது. அப்போது ஜனாதிபதி பிரேமதாஸ

தான் விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்கு மிகவும் பலமாக காணப்பட்டார். அந்நேரத்தில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதங்களை இவர் வழங்கியிருந்தார். ஆயுதங்களை மட்டுமன்றி கோடிக்கணக்கான பண பலத்தினையும் இவரே வழங்கியிருந்தார். இவரது உதவியினால் மட்டுமே 350 ஆகக்காணப்பட்ட விடுதலைப்புலிகளின் தொகை 3 மாதத்தில் மட்டும் 6000 ஆக உயர்ந்தது. இது தான் வரலாற்றில் இடம்பெற்றது. உங்களுக்கு வரலாறு பற்றி தெரிய வாய்ப்பில்லை. ஆகவே தான் நான் கூறுகிறேன் .புலிகள் பற்றி கதைக்கும் போது எனது பெயரை நீங்கள் சேர்க்கத் தேவையில்லை. அவ்வாறு நீங்கள் எனது பெயரை சேர்ப்பீர்களேயானால் நான் இவ்வாறாக ஒவ்வொரு ரகசியத்தினையும் வெளிக்கொண்டு வருவேன்" என ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிகொடுத்திருந்தார்

பின்னர் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தையடுத்து 2020 ஆம் ஆண்டு பிரதமராகவிருந்த மஹிந்த ராஜபக்ஸ வின் மட்டு - அம்பாறை ஒருங்கிணைப்பாளராக கருணா அம்மான் நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்து அதன் தலைவராக கருணா அம்மான் தன்னை அறிவித்துக்கொண்டார் .எனினும் கருணா அம்மானுக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைக்கவில்லை .இதனால் அவர் அரசியலில் இருந்தும் ஒதுங்க வேண்டி ஏற்பட்டது. அண்மைக்காலமாக அவரின் செயற்பாடுகள் காணாமல் போயிருந்த நிலையில்தான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கின்றேன் என்ற கோஷத்துடன் மீண்டும் வெளிப்பட்ட கருணா அம்மான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அலிசாஹிர் மௌலானா மற்றும் , அன்வர் ஹாஜியார் ஆகியோரையும் காட்டிக்கொடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச ,அநுரகுமார திசாநாயக்க ஆகியோர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்து பிரசாரங்களில் ஈடுபட்டபோதும் கருணாஅம்மான் தலைகாட்டவில்லை .கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்த நிலையிலேயே வெளியே வந்த கருணா அம்மான் கூட்டமொன்றில் பேசுகையில்,

"விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து என்னை வெளியில் அழைத்து வந்தது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தான் .நான் புலிகள் அமைப்பிலிருந்து பிரிய நினைத்தபோது ரணில் விக்கிரமசிங்கதான் என்னை கொழும்புக்கு வரவழைத்தார்.2003ஆம் ஆண்டு நாங்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்த பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து என்னை பாதுகாப்பாக கொழும்புக்கு அழைத்துச் சென்றவர்கள் அலிசாஹிர் மௌலானாவும், அன்வர் ஹாஜியாரும்தான். அன்வர் ஹாஜியாரின் வாகனத்தில் தான் நான் வந்தேன். அந்த இருவராலும் தான் நான் அன்று காப்பாற்றப்பட்டேன் இந்த உண்மை இப்போது வரை யாருக்கும் தெரியாது. பலரும் மஹிந்த ராஜபக்சதான் பிரித்தார் கோத்தபாய ராஜபக்ஸ்தான் அழைத்தார் என்று கூறுகின்றனர் .அது தவறு என்னை புலிகள் அமைப்பிலிருந்து வெளியே வரவழைத்தவர் ரணில் விக்கிரமசிங்க தான் "என்று கூறியே ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஒரு துரோகத்தனத்தையும் காட்டிக்கொடுப்பையும் செய்துள்ளார்.

தற்போது விடுதலைப்புலிகளை பிளவு படுத்தி தன்னை பிரித்தது ரணில் விக்கிரமசிங்க தான் என்பதை கருணா அம்மானே பகிரங்கமாக கூறியுள்ள நிலையில், 2020 பாராளுமன்றத்தேர்தல் காலகட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்புமாவட்ட வேட்பாளராக போட்டியிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணித்தலைவரான மனோ கணேசன் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கருணா பிரிந்த அந்த தருணங்கள் பற்றிய பதிவொன்றை தனது முகநூலில் "புலிகளும் ரணிலும் மகிந்தவும் நானும் கருணாவும் மௌலானாவும்" என்ற தலைப்பில் பதிவு செய்திருந்தார் அவர் தனது பதிவில்,

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை சந்தித்து விட்டு நான் கொழும்பு வந்த அடுத்தநாள் பிரதமர் ரணிலை அவரது பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்தேன்.நான் விடுதலைப் புலிகள் தலைவரை சந்திப்பதற்கு கிளிநொச்சி சென்ற பொழுது பிரதமர் ரணில் கொழும்பில் இருக்கவில்லை. ஆகவே அப்போது அரசாங்கத்தில் "செகண்ட்-இன்- கொமாண்ட் " ஆக இருந்த அமைச்சர் கரு ஜெயசூர்யவிடம் எனது பயணத்தை பற்றி கூறி சென்றிருந்தேன்.

ஜனாதிபதி சந்திரிகா ஒரு தகவலை கொண்டு சென்று புலிகளின் தலைவரிடம் சேர்க்க சொன்னார் என்று கருவிடம் முன்னமே கூறி இருதேன்.கரு மூலமாக எனது கிளிநொச்சி பயணத்தை அறிந்த ரணில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான எனது சந்திப்பு பற்றி அறிய விரும்பினார்.அதே சமயத்தில் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவரை என்னைப் போலவே சந்தித்த அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமான் பெரியசாமி சந்திரசேகரன் ஆகியோரிடமும் ரணில் கதை விட்டு தகவல்கள் பிடுங்கி இருக்கலாம்.

எனது சந்திப்பு பற்றி என்னுடன் ரணிலுக்கு பேசி அறிய வேண்டிய தேவை இருந்ததை போல எனக்கும் ரணிலுடன் இது பற்றி பேச வேண்டிய தேவை இருந்தது. புலிகளின் தலைவர் "ரணிலுக்கு சொல்லுங்கள்!" என்று எனக்கு சொன்ன செய்தியை நான் பிரதமர் ரணிலிடம் கூற வேண்டும் அல்லவா?

விடுதலைப் புலிகள் தலைவரால் சொல்லப்பட்ட, கருணா அம்மான் தொடர்பான விடயத்தை அவர் சொன்ன மாதிரியே நான் ரணிலிடம் சொன்னேன். "அலிசாஹிர் மௌலானா மூலமாக கருணா அம்மானை கொழும்புக்கு கூட்டி வந்தீர்கள். இன்று அவரை கொழும்பிலே இரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்கள் " என்று பிரபா கூறியதை அப்படியே ரணிலிடம் கூறினேன்.

நான் இதை சொன்ன பொழுது ரணிலின் அறையில் நானும் ரணிலும் மட்டும்தான் இருந்தோம். மேசையின் அந்த பக்கம் ரணில். இந்த பக்கம் நான். ரணில் என் முகத்தை சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தார்.பிறகு பிரபாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்தார். கருணா அம்மான் தானாகவே பிரபாவுடன் முரண்பட்டு சண்டையிட்டுக்கொண்டதாகவும்தான் தனக்கு புலனாய்வு அறிக்கை கிடைத்ததாக ரணில் என்னிடம் சொன்னார்.

இப்பொழுது எனது சந்தர்ப்பம். நான் சற்று நேரம் ரணில் முகத்தை உற்று பார்த்துக்கொண்டு இருந்தேன். இல்லை, இல்லை என்று மறுத்து நாட்டின் பிரதமருடன் விவாதம் செய்ய வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை."இதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. மிஸ்டர் பிரபாகரன் அப்படித்தான் உங்களுக்கு சொல்ல சொன்னார்." என்று கூறிவிட்டு அந்த அறையில் இருந்து வெளியேறத் தொடங்கினேன்.

அமைதியாக அமர்ந்திருந்த பிரதமர் ரணில் கதவுப் பிடியில் கைவைத்து கதவை திறக்க முற்பட்ட என்னை அழைத்து, அவரது ஆசனத்தில் அமர்ந்திருந்தபடியே "உண்மையிலேயே பிரபாகரன் அவ்வாறு கூறினாரா?" என்று கேட்டார்.நான் கதவுக்கு அருகில் நின்றபடியே "ஆம்!" என்று வார்த்தையாலும் தலை அசைத்தும் கூறிவிட்டு பிரதமர் அறையில் இருந்து வெளியேறினேன்.

அடுத்து வந்த நாட்களில் சில சம்பவங்கள் நடந்தன. ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் எம். பி .யாக இருந்த அலிசாஹிர் மௌலானா தனது எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். அதன் பின்னர் அவர் நாட்டிலிருந்து வெளியேறினார்.இந்த முடிவுகளுக்கு பின்னால் பிரதமர் ரணில் இருந்ததை நான் ஊகித்துக்கொண்டேன்.அப்போது அலிசாஹிர் ஐக்கிய தேசிய கட்சியின் நேரடி உறுப்பினர். அவரது தலைவர் ரணில் விக்ரமசிங்கதான். இப்போது அலிசாஹிர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய உறுப்பினர். இப்பொழுது அவரது தலைவர் நண்பர் ரவுப் ஹக்கீம்.

விடுதலை புலிகள் அரசியல் சிறுவர்கள் கிடையாது. அவர்களை யாரும் திட்டமிட்டு பிரிக்க முடியாது. அவர்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத்தான் அடுத்தவர்கள் பயன்படுத்த முடியும்.ஆகவே புலிகளின் தலைவர் தனது கிழக்கு மாகாண தளபதியை தனது அமைப்பில் இருந்து வெளியேற்றினார். இதையே கருணா அம்மானிடம் கேட்டால் என்னை யாரும் வெளியேற்றவில்லை நானே தான் வெளியேறினேன் என்று கூறுவார். அது அவரவர் நிலைபாடுகள்.

இலங்கை பிரதமர் என்ற முறையிலே ரணில் விக்கிரமசிங்க கருணா அம்மான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிவதை விரும்பியிருப்பார். பிரிந்த கருணாவை தனது எம்.பி. மௌலானா ஊடாக கொழும்பிற்கு கொண்டு வந்திருப்பார்.இது பின்நாட்களில் கருணா அம்மானை பயன்படுத்தி புலிகளை தோற்கடிக்க ராஜபக்ச அரசாங்கத்திற்கு வழி சமைத்தது.

இதிலே தூரதிஷ்டசாலிகள் இரண்டு பேர். ஒருவர் பிரதமர் ரணில். அடுத்தவர் புலிகளின் தலைவர் பிரபா. தான் புலிகளின் பிரதான தளபதியை பிரித்து புலிகளை பலவீனப்படுத்தி அவர்கள் தோல்வியடைவதற்கு பெரும் காரணகர்த்தா என்று தன்னை சிங்கள மக்கள் மத்தியிலே சந்தைப்படுத்திக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடியவில்லை. இது ரணிலின் தூரதிஷ்டம்.அதே போல ரணிலை தோற்கடித்து அதன் மூலம் கொழும்பிலே ஒரு சிங்கள தேசியவாத அரசாங்கம் உருவாகினால்தான் தமிழ் ஈழத்திற்கான தமது பயணம் இலகுவாகும் என புலிகளின் தலைவர் பிரபாகரன் தவறாக கணக்கு போட்டு விட்டார். இது அவரது தூரதிஷ்டம் " என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை ,தமிழர் போராட்டத்தை தமிழ் மக்களை, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவை ,முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை காட்டிக்கொடுத்து துரோகம் செய்த கருணா அம்மான் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் தனது மைத்துனரான அலிசாஹிர் மௌலானாவையும் (இருவரினதும் மனைவிகள் தமிழ் சகோதரிகள்), அன்வர் ஹாஜியாரையும் காட்டிக்கொடுத்து துரோகம் செய்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள ரணில் விக்கிரமசிங்க ,தமிழ் மக்களின் வாக்குகளை எப்படியாவது பெற்று விட வேண்டுமென பெரும் பிரயத்தனம் செய்துவரும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை புகழ்வதாக நினைத்துக்கொண்டு கருணா அம்மான் வெளிப்படுத்தி, உறுதிப்படுத்தியுள்ள "புலிகளிடமிருந்து ரணில் விக்கிரமசிங்க தான் என்னை பிரித்தார்"என்ற விடயம் ரணில் விக்கிரமசிங்கவுக் கு ஆதரவான தமிழர் வாக்கு வங்கிக்கு வைத்த வெடிகுண்டாகவே இருக்கப் போகின்றது.

# இலங்கை கடற்படையினர் 22 ராமேஸ்வரம் மீனவர்களை சிறை பிடித்து சென்றது ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை கிராமங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மூன்று படகையும் அதிலிருந்து 22 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படை கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணைக்கு பின்னர் யாழ்ப்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் படகுடன் ஒப்படைக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மீன் பிடித்து துறைமுகத்தில் இருந்து 22-06-2024 அன்று 507 விசைப்படகுகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் மீன்பிடி அனுமதி சீட்டு பெற்று மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.





மீனவர்கள் 23-06-2024 அன்று அதிகாலை சுமார் 2 மணி அளவில் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக ஜஸ்டின், ரெயிமென்ட் மற்றும் கெரின் ஆகியோருக்கு சொந்தமான 3 மீன்பிடி விசைப் படகைளையும் அதில் இருந்த சுரேஷ் பாபு, காளிதாஸ், ரூபின், கண்ணன், நாகராஜன் உள்ளிட்ட 22 மீனவர்களை கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று அவர்களிடம் முதல் கட்ட விசாரணை செய்து பின்னர் மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்தில் வைத்து மீனவர்கள் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகள் ஒப்படைக்கப்பட்டனர்.

ஒப்படைக்கப்பட்ட மீனவர்களுக்கு மலேரியா மற்றும் கொரோனா பரிசோதனை செய்த பின்னர் மீனவர்கள் அனைவரும் தற்போது யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

மீன்வளத்துறை அதிகாரிகள் விசாரணைக்குப் பின் மீனவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் ஊர்காவல்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்படுவார்கள் என மீன்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

60 நாள் மீன்பிடி தடைக்காலம் முடிந்து ஒரு வாரம் காலம் மட்டும் முடிவடைந்த நிலையில் இலங்கை கடற்படையினர் 22 ராமேஸ்வரம் மீனவர்களை சிறை பிடித்து சென்றது ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை கிராமங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வயிற்று பிழைப்பிற்காக மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளனர்.

## குற்றச்சாட்டுகளை மறைக்க பாடசாலைகளை மூடி போராட்டம்

### மாகாண கல்வி பணிப்பாளர் குயின்ரஸ் வெளியிட்ட இரகசிய ஒலிநாடா அம்பலம்

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் மீது பல்வேறு தரப்பினரலாம் ஊழல் நிர்வாக முறை வீடு தொடர்பான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் பாடசாலைகளை மூடி போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு மாகாண கல்வி பணிப்பாளர் குயின்ரஸ் அழுத்தம் வழங்கும் இரகசிய திட்டம் தீட்டும் ஒளிநாடா வெளியாகி உள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,
வட மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் நிர்வாகம் மற்றும் ஊழல் முறைகேடுகள் தொடர்பாக வடமாகாண கல்வித் திணைக்களம் உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்வது இல்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உட்பட பல்வேறு தரப்பினர்களும் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வருகின்றனர்.

குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னணி சமூக ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகள் சமூக வலைத்தளங்கள் என்பவற்றில் செய்திகள் பரவ ஆரம்பித்தன

இவ்வாறான நிலையில் தம்மீது உள்ள குற்றச்சாட்டுகளை மறைப்பதற்காகவும் அது தொடர்பில் எழுதுபவர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்காக பாடசாலை மாணவர்களை பகடைக்காய்களாக பயன்படுத்தும் இரகசிய திட்டம் மாகாண கல்வி பணிப்பாளரின் குரல் பதிவி அடங்கிய ஒலிநாடாவுடன் வெளியாகி சர்ச்சைகளை தோற்றுவித்துள்ளது. அரச உயர் அதிகாரியாக இருந்து கொண்டு அரசு நிர்வாகத்தை குழப்பம் வகையில் பாடசாலைகளை மூடி மாணவர்களை போராட்டத்துக்கு கட்டாயப்படுத்தும செயற்பாடு அம்பலமாகியுள்ளமை பல்வேறு தரப்பினரிடமும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



## தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தை மீண்டும் ஆரம்பம்பித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி

தையிட்டியில் அமைந்துள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டமானது வெள்ளிக்கிழமை 21ம் திகதி அன்றையதினம் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த விகாரையானது பொதுமக்களது காணிகளை அபகரித்து அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ளது. எனவே அதனை அகற்றுமாறு கோரி ஒரு வருட காலமாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருக்கின்றது.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு குறித்து விகாரையில் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட உள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகாமாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



## மன்னாரில் முறைகேடான உறுதிப் பத்திரம் தயாரிப்புகளை சில சட்டத்தரணிகள் மேற் கொள்கின்றனர்......

## சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சட்டத்தரணிகள் சாமானிய மக்களின் நிலத்தை மோசடி கும்பலுக்காக அபகரித்து வருவது வேதனைக்குரிய விடயம்.

### மன்னாரில் கனிய மண் அகழ்விற்காக நிலத்தை இழந்தவர்களுக்கு மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் அவசர வேண்டுகோள்.

மன்னாரில் கனிய மண் அகழ்விற்காக நிலத்தை இழந்தவர்கள் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவ் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் இன்று (28) விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்,,,

மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கனிய மண் அகழ்விற்காக உள்ளூர் காணி முகவர்கள் மூலம் சட்ட விரோதமான முறையில் காணி அபகரிக்கப் படுவதாக பல்வேறு விதமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. சில குழுக்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியும் அதிகாரத்தை உபயோகித்தும் சாதாரண மக்களின் காணிகளை அபகரித்து வருவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பயன் படுத்தப்படாத நிலங்களுக்கு ஆட்சி உறுதி களையும் எழுதுவதாகவும் கூறுகின்றனர். அது மாத்திரமின்றி சில காணிகளுக்கு பயன்பாட்டில் இல்லாத வேறு உறுதிகளை எல்லைகளை மாற்றி குறித்த இடங்களில் நில அபகரிப்பிலும் ஈடுபடுகின்றனர். எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆதாரங்களோடு குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் இவ்வாறு முறைகேடான உறுதிப் பத்திரம் தயாரிப்புகளை சில சட்டத்தரணிகள் மேற் கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட காணிகளை பல கோடி ரூபாய் பெறுமதிக்கு அவுஸ்ரேலியாவை தளமாகக் கொண்டு கனிய மண் அகழ்வில் ஈடுபட உள்ள இலங்கை முகவர் நிறுவனங்களுக்கு விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சட்டத்தரணிகள் சாமானிய மக்களின் இருப்பு உரிமையாகிய நிலத்தை இவ்வாறான மோசடி கும்பலுக்கு ஆதரவாக செயல்படுவது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

ஆகவே இவ்வாறு பாதிக்கப் பட்டிருக்கின்ற மக்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த மோசடி கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய வேலைகளில் ஈடுபட்டு வருகிறோம்.



ஆகவே நில அபகரிப்பாளர்களுக்கு அஞ்சாமல் முன்வருமாறு தங்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம். எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்

# உண்மையைச் சொன்னால், வன்முறை தான் தீர்வா?

## யாழ்ப்பாணத்தில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள் இணைந்து ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி போராட்டம்

யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான கவனயீப்பு போராட்டம் 18-06-2024 அன்று முன்னெடுக்கப்பட்டது

வடக்கு மாகாண ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையம் முன்பாக அன்று காலை 10 மணி அளவில் பொது அமைப்புகள் சிவில் அமைப்புகள் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் சமய தலைவர்கள் என பலரையும் உள்ளடக்கிய கவனிப்பு போராட்டம்



கடந்த 13ஆம் தேதி நள்ளிரவு 12. 15 மணியளவில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதிபனின் வீட்டின் மீது இனம் தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் ஊடக சொத்துக்கள் தீயிட்டு அழிக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தும் தரப்பினரால் தாக்குதலை நடாத்தியவர்கள் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. எனவே குறித்த விடையம் தொடர்பில் நீதி கூறும் வகையிலான போராட்டம் இன்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.



குறித்த போராட்டத்தில் வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், சமூகவியலாளர்கள், புத்திஜீவிகள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் என அதிகளவானோர் கலந்து கொண்டனர்.

இதன் போது போராட்டக்காரர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பதாகைகளைத் தாங்கியவாறு கோஷம் எழுப்பி தமது கண்டனத்தை வெளியிட்டனர்.

குற்றவாளிகளைக் காப்பாற்றாமல்,
உண்மையை உலகறியச் செய்!, உண்மையை மறைக்கச்
சம்பவத்தைத் திசை திருப்பாதே!

மொட்டந் தலைக்கும்
முழங்காலுக்கும் ஏன் முடிச்சு!

குற்றத்தை நிரூபித்து உண்மையை வெளிப்படுத்து!

ஊடகர் ஒற்றுமையை உலகறியச் செய்வோம்!

உண்மையைச் சொன்னால்,
வன்முறை தான் தீர்வா?

உள்ளிட்ட கோஷங்களை கொண்ட பதார்த்தங்களை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

இதன் போது ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் இலங்கையில் இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பிலே நீதி கண்டறியப்பட வேண்டும் என வலியுறுத்திய அறிக்கையில் அனைவரின் கையெழுத்துக்களும் பெறப்பட்டு ஆளுநர் ஊடாக ஜனாதிபதிக்கும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



For All Your Traveling Needs
Cheapest Air Fare In Town
Please call Mr. Lavan

Lowfare
travels and tours

Phone: 416.261.0555
2625 Eglington Ave East
Scarborough, Ontario
M1K 2S2

# தேசம்

NATION THE THESAM

RE/MAX
REALTY INC, BROKERAGE
ACE



Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
toronto.baskaran@gmail.com

Issue - 04 Once a Month JUNE 2024

## வட இலங்கையில் ஊடகவியலாளர்களை மிரட்டும் வகையில் அவர்கள் மீது பொய்வழக்குகள் பொலிசாரினால்

பக்கம் 14




UNIVERSITY OF TORONTO

## தரவரிசையில் கனடாவில் முதலிடத்திலும் வட அமெரிக்காவில் இரண்டாவது இடத்திலும் ரொறன்ரோ பல்கலைக் கழகம்

பக்கம் 17

## மாமனிதர் ரவிராஜ் அவர்களிடம் நாம் கண்ட துணிச்சலையோ இதயசுத்தியான நடத்தையையோ எந்த தமிழ்தேசியகட்சி நாடாளுமன்ற உறுப்பினரிடமோ, எதிர்பார்க்கமுடியாது

பக்கம் 18





## தான் ஒரு துரோகியென மீண்டும் நிரூபித்துள்ள “கருணா” என்னும் விநாயகமூர்த்தி

பக்கம் 20